1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

77-ம் புத்தகம் 22-ம் இல. யாழ்ப்பாணம் 1952-ம் ஆண்டு ஆனிமாதம் 12-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## "டேமியன்பாதிரியாரின் திருப்பணி"

நம்பத்திரிகையின் சென்றவாரஇதழிலே "தியாகவீரர் தமியான் சுவாமிகள்" எனும் தலையங்கத்துடன் வெளியானகட்டுரையை அபிமானிகள்பலரும் ஆர்வத்துடன் படித்திருப்பார்கள். இம்முறை "உதய தாரகை" (Morning Star) யிலே "டேமியன் பாதிரியாரின் திருப்பணி" எனும் தலையங்கத்தின்கீழ் வெளியானகட்டுரை பெயர்த்துத் தரப்படுகிறது. இங்கே "டேமியன்பாதிரியார்" என்பது குஷ்டரோகரின் அப்போஸ்தலரென அறியப்படுகிறவரான அதே தமியான்சுவாமிகளையே குறிப்பதாகும். "பாதிரியார்" என இருப்பதிலிருந்து இக்கட்டுரை இந்துசமய அபிமானிஒருவரால் எழுதப்பட்டதென்றே அனுமானிக்கின்றோம். அபிமானிகள் இதனையும் மகிழ்வுடன்படித்து நலனெய்துவார்களாக! "டேமியன்பாதிரியார்" என்பதை நாம் தமியான் சுவாமிகளென ஈண்டு வழங்குகின்றோம்.

கடலின் அடிவாரத்தில் முத்தும், வேகமான நீர்வீழ்ச்சியில் மின்சாரமும், அமைதிகொள்பவனிடம் ஓர்அறிவும், நீண்ட விவாதத்தின்முடிவில் ஓர்உண்மையும், நிகரற்றவீரனின் நெஞ்சத்தில் ஓர்அஞ்சாமையும் ஒளித்துக்கொண்டிருப்பது போல, கிறீஸ்துவின் அன்பினால் நிறையப்பட்ட ஒருவனில் தியாகம் அமைந்திருக்கிறதென்பதில் ஐயமில்லை.

கிறீஸ்தவமதம் தொடங்கின காலந்தொட்டு இன்றுவரை தனக்கென்வாழப் பிறர்க்கென வாழ்ந்து, தன்னயங்கருதாது பிறர்நயங்கருதி, ஊர்விட்டு, உறவினர்விட்டு, நாடுவிட்டு, நகரம்விட்டுக் கிறீஸ்துவின் அன்பால் தூண்டப்பட்டுத் திருத்தொண்டு புரிந்துவந்த தியாகிகள் அநேகரை நாம்அறிவோம்.

இவர்கள் மனிதனை மனிதன் என மதித்துப் பிற்போக்கானவர்களை முற்போக்காக்கினர். அடிமைகளின் விலங்குகளை அறுத்தெறிந்தனர். படிப்பற்ற பாமரரைப் படிப்பாளிகளாக்கினர். சுகவீனருக்குச் சுகத்தையளித்தனர். இம் மகான்களுள் ஒருவரே தமியான்சுவாமிகள்.

எளிய குடும்பம். சிறியநாடு. ஆனால், இதில் ஒருபெரியார் 1840-ம் வருடத்தில் பிறந்தார். இவர் தான் தமியான். இவர் தன் மூத்தசகோதரனோடு ஒரேகலாசாலையில் கற்றுவந்தார். அந்நாட்களில் இவருடைய சகோதரன் பசிபிக்சமுத்திரத்திலுள்ள தீவுகளில்ஒன்றில் மிஷனெரி ஊழியம் செய்வதற்காகத் தன்னைஒப்புக்கொடுத்தார். இத்தீவுகளில் மிலேச்சர் வசித்துவந்தனர். இவர்களுள்பலர் மனிதரைப் பிடித்துக்கொன்று அவர்களின்மாமிசங்களைத் தின்னும் கொடியபாதகர்களாயிருந்தனர். இப்படிப்பட்டதீவுகளில் ஒன்றிற்குத் தன்னைமிஷனெரியாக ஒப்புக்கொடுத்த தமியான் சகோதரன் காத்திராப்பிரகாரமாய் நோயுற்றார். இதனால் இவருடைய உடல்வலிமை மிகவும் குன்றிற்று. தான்மிஷனெரியாகப் போகமுடியாதேஎனக் கவலைப்பட்டுக்கொண்டிருப்பதைக் கவனித்தார் தமியான். உடனே 'அண்ணா நான் உனக்குப் பதிலாக அந்தத்தீவிற்கு மிஷனெரியாகப் போகிறேன், கவலைப்படாதே' என்று கூறித் தன் அண்ணனை உற்சாகப்படுத்தினர்.

— D. R. A. —

நீர்பூத்த நெருப்புப்போல், அமைதிகொண்ட கடல்போல், ஆடிநிறை காற்றுப்போல், அமைதியாய்த் தன்னைத் தயார் செய்தார்தமியான். இதன்பின், தான் தன் அண்ணனுக்குப் பதிலாக அத்தீவிற்கு மிஷனெரியாகப் போவதற்குத் தீர்மானித்திருக்கிறதாகவும், தன்னை அங்கு அனுப்பவேண்டுமெனவும் சபையின் தலைவர்களுக்கு அறிவித்தார். அதன்படியே தமியான மிஷனெரியாக அங்கு அனுப்பப்பட்டார்.

பசிபிக் சமுத்திரத்திலுள்ள தீவுகள் கும்பல் கும்பலாகச் சேர்ந்திருக்கின்றன. இவற்றுள் ஒருகும்பலுக்கு ஹவாய்யன் தீவுகள் என்றுபெயர். இந்தத் தீவுகளுள் ஒருதீவில் தனதுஊழியத்தை ஆரம்பித்தார். இங்கு சீவியம் மிகவும்கஷ்டமாய் இருந்தது. பாறைகளில்ஏறவேண்டும். பள்ளத்தாக்குகளில் இறங்கவேண்டும். கரடுமுரடான பாதைகளில் நடக்கவேண்டும். காடுகளுக்கூடாகவும், ஆறுகளுக்கூடாகவும் அடுத்தஅடுத்த கிராமங்களுக்குப் போகவேண்டும்.

இவ்விதமான கஷ்டங்கள் இருந்தாலும் இந்த இடத்தில் ஒன்பதுவருடங்கள் நல்லூழியம் புரிந்துவந்தார். இக்கஷ்டங்களைச் சுவாமியார் பொருட்படுத்தவில்லை. இதனால் இவரின் ஊக்கம்தளரவில்லை. 'ஊக்கமதைக் கைவிடேல்' என்ற வாக்குக்கிணங்கக் கிறீஸ்துவின் அன்பின் வல்லமையினால் நிறையப்பெற்றவராய் மலைகள் ஏறி, காடுகள்கடந்து, ஆறுகள் தாண்டி, காலில்இருக்கும் சப்பாத்துக் கிழிந்ததையும் கவனியாமல், கால்களிலும் இரத்தம் வடியவடியத் தன்வேலையைப் பிழையின்றிச் செய்துவந்தார். அத்தீவுமக்கள் இவரின்மட்டற்ற அன்பைக் கண்டு மகிழ்ந்தனர். இவரைமதித்தனர். இவரில் அன்புவைத்தனர்.

(தொடரும்)

## கத்தோலிக்க குடும்பம்

ஒரு சமுதாயத்தின் முன்னேற்றமும், அதன் சகலபாக்கியங்களும் சமுதாயத்தின்அஸ்திவாரமும், ஆணிவேருமாகிய குடும்பத்திலிருந்துதான் உற்பத்தியாக வேண்டியது. ஒருசமுதாயத்திற்கு என்னென்ன குணங்கள் இருக்கவேண்டுமென நாம் விரும்புகிறோமோ அத்தகைய குணங்களை நமதுகுடும்பங்களில் நாம்விதைக்கவேண்டும். இன்று உலகம்இருக்கும் சீர்கேடான நிலைமையைப்பார்த்துச் சமய அதிகாரிகளும், அரசாங்கத்தலைவர்களும், சமுதாயமேதாக்களும் அங்கலாய்க்கிறார்கள். ஆனால், இச்சீர்கேட்டிற்கெல்லாம் காரணம் என்னவென்று ஆராய்வோமானால், அது நமதுகுடும்பங்களில்தான் இருக்கிறதென்று காணலாம். குடும்பத்தின் சீர்கேடுதான் இதற்கெல்லாம்காரணம்.

தாய்மடியிலிருந்து கொஞ்சிக் குலாவும்குழந்தை தன்மாமியாரைத் திட்டுகிறதைக் கேட்டுக்கொண்டிருக்கும்தாய் 'ஆ! என் குழந்தை எவ்வளவுசாமர்த்தியமாய்ப் பேசுகிறான் பாருங்கள்!' என்று குழந்தையைக் கட்டிஅரவணைத்து முத்தம்கொடுப்பாள். ஆனால், அந்தக்குழந்தை பிற்காலத்தில் பெற்றோருக்குக் கட்டுப்படாது வீட்டிற்கும், ஊருக்கும், இனபந்துகளுக்கும் கேவலத்தைஉண்டுபண்ணி அடங்காப்பிடாரியாய்த் திரியும்போதுதான், தான்செய்த தவறுதலைத் தாய்உணருவாள்.

ஆனால், அந்தோ! காலம் கடந்துவிட்டது. ஐந்தில்வளையாதது ஐம்பதில்வளையாது. தன் கைக்குள்ளே அடங்கியிருந்தபொழுது தன்மகனை அடக்கத் துணியாது, தட்டிக்கொடுத்து வந்ததாய் இப்பொழுது என்ன செய்வாள்? பாவம், பாருங்கள்! ஒரு குடும்பம் பாழாகிவிட்டது. தற்காலஉலகில நாம் காணும் ஆயிரக்கணக்கான குடும்பங்களின் கதிஇதுதான்.

இன்று உலகில் ஏற்பட்டுள்ள குணக்கேடுகளான தொற்றுவியாதிகளுக்கெல்லாம் காரணம் இம்மாதிரியான குடும்பங்களே. படிப்பாளிகள் பிரசங்கமேடைகளிலே பீரங்கிக்குண்டுகள் போன்ற மொழிகளைச் சரமாரியாய் வருஷிக்கிறார்கள். "உலகம் முன்னேறவேண்டும்; ஒழுக்கம் நிலைபெறவேண்டும்; சத்தியம், நீதி, ஞானம், அன்புமுதலிய அறநெறித் தத்துவங்கள் நிலை பெறவேண்டும்" என அவர்கள் ஆர்ப்பரிக்கிறார்கள். ஆனால், ஒருமுறை தங்கள்குடும்பங்களும் அத்தன்மையுடைய

**Mrs. Joan of Arc, B. A., B. T.**

னவா, இல்லையா என்பதைப் பற்றிச் சற்றேனும் கவலைஎடுத்துக்கொள்ளமாட்டார்கள். நான் சகலத்திலும் உத்தமன், நான் சொல்லும் போதகம் எனக்கல்ல, கேட்கிறவர்கள்தான் அவைகளை அனுசரிக்கவேண்டியது என்பதுதான் அவர்களின் கொள்கை. இத்தகையவர்கள் நோய்இன்னதெனக் கண்டுபிடியாது மருந்துகொடுத்துக் குணப்படுத்த முயலும் வைத்தியனுக்குச்சமானம். போதனையை விடச் சாதனைமேல். ஏட்டுச் சுரைக்காய் கறிக்குஉதவாது என்பதை அவர்கள் உணரார்கள் போலும்.

இன்றைய உலகிற்குத் தேவைப்படுவது சேவைதான், பேச்சல்ல. நமதுகொள்கைகள் நமதுசெய்கையில் பிரதிபலிக்கவேண்டும். இன்றுநாம் உலகிற்கும், நம்தாயாகிய திருச்சபைக்கும், நமதுநாட்டிற்கும் செய்யக்கூடிய உத்தமசேவை நம்குடும்பங்களைச் சீர்ப்படுத்துவதுதான். கத்தோலிக்கராகிய நாம் இவ்விஷயத்தில் அதிககவனம்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்துக்குப்பின்

**"ஒருவர் விபத்தில் அகப்பட்டுச் சாகுந்தறுவாயில் இருக்கிறர். குருவானவர் வருகிறவரையில் அவர் உயிருடன் இருக்க மாட்டார். அவருடைய ஆத்துமத்தைக் கடவுள்முன் செல்லத் தயாரிக்கவேண்டும். நீ என்ன செய்வாய்?"**

ஹெலன் ஒருபாடசாலையில் ஆசிரியையாய்இருநதாள். அன்று ஞாயிற்றுக்கிழமை. இரண்டரைமணிக்கு ஞானேபதேசவகுப்பு ஆரம்பமாயிற்று. அன்றையபாடம் அவஸ்தைப்பூசுதலைப் பற்றியதே. அதைப்பற்றிச் சிறுவருக்குத் தெளிவாய்எடுத்துரைக்க ஹெலன் முயன்ருள். ஆரம்பத்திலே சிறுவர்கள் பாடத்தைக் கவனித்தவர்களாகத் தோன்றவில்லை. ஆனல், சற்றுப்பின் எல்லாம்சரியாயிற்று. அவள் கேட்ட கேள்விகளுக்குச் சிறுவர்கள் தயங்காமல் பதிலளித்தார்கள்.

"ஒருவன்திடீரெனக் கடினவியாதிவாய்ப் படுகிருன். நீமாத்திரமே அவன்அருகில் இருக்கிருய். அப்பொழுது நீஅவனுக்கு என்ன செய்வாய்?"

"உனக்கு நல்லபழக்கமான ஒருவர் மரணப்படுக்கையில் இருக்கின்ருரென வைத்துக்கொள்வோம். குருவானவரைக்கூப்பிட ஆள்போகிருர். அவஸ்தைப்பூசுதலுக்கு வேண்டியவற்றை நீதான் தயாரிக்கவேண்டும். என்ன செய்வாய்?"

"நீ ஒருவருடன் மோட்டர்காரில் பிரயாணம்செய்கிருய். விபத்துநடக்கிறது. அவர் சாகுந்தறுவாயில் இருக்கிருர். குருவானவர் வருகிறவரையில் அவர்உயிருடன் இருக்கமாட்டார். அவருடையஆத்துமத்தைக் கடவுள் முன்செல்லத் தயாரிக்கவேண்டும். நீ என்னசெய்வாய்?"

இந்தக்கேள்விகளுக்கு ஒவ்வொரு சிறுவனும் ஏதாவதுஒருபதில் கூறும்படிசெய்தாள். பின்னர் செய்யவேண்டியதைக் கற்பித்து, ஒவ்வொருசிறுவனும் அந்தப்பதிலைத் திருப்பித்திருப்பிச் சொல்லும்படி செய்தாள். கடைசிப்பையன்வரை அதை ஒப்பித்ததும் மணிஅடித்தது. எல்லோரும் தேவநற்கருணை ஆசீர்வாதத்துக்குச் சென்ருர்கள். ஆசீர்வாதத்துக்குப்பின் வானம்கறுத்தது. காற்றுப் பலமாய் அடித்தது. ஹெலன் வீட்டுக்குச் சென்ருள்.

"இன்று இந்தப்பாடத்தைக் கற்பிப்பது வெகுசிரமமாய் இருந்தது. நான் சொன்னது சிறுவர்களுக்கு விளங்கியதோ, என்னவோ தெரியவில்லை. ஆனல், நான் என்ஞல்ஆனமட்டும் முயன்றுகற்பித்தேன்" எனக் ஹெலன் தன்னைத்தேற்றிக்கொண்டாள்.

* * *

அடுத்தவெள்ளிக்கிழமை ஜோ பேர்ண்ஸ்என்னும் பிரபலவியாபாரி தனது மோட்டர்வண்டியைத் தானேசெலுத்திக் கொண்டு ஸ்ரெர்லிங்நகருக்குச் சென்ருன். ஜிம் மாட்டீன்என்ற மற்ருேர்வியாபாரி அங்கு அவரைச்சந்தித்தான். இருவரும் வியாபாரத்தைப் பற்றி நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தனர். இறுதியாகத் தத்தம்வீட்டைப்பற்றிப் பேசினர்.

"ஜிம், இன்றுமுழுவதும் நான் இங்கேதங்கிவிட்டு, நாளைசனிக்கிழமை காலை புறப்படவேண்டும். 250 மைல் தூரம் பிரயாணம்செய்து என்அம்மாவைப் பார்க்கப்போகிறேன். நான் போனதும் அம்மா ஆச்சரியப்படுவாள். ஏனெனில், என்னைஅவர்கள் எதிர்பார்க்கவில்லை" என ஜோகூறிச் சில பிரதிமைப்படங்களைக் காண்பித்தான். "நான் போனமுறை வீட்டுக்குப் போயிருந்தபோது என்தங்கை இந்தப் படங்களைப் பிடித்தாள்."

நிற்க, "ஜிம், ஒருஇரகசியம் சொல்லப்போகிறேன். இந்தவருடம் நான் பெரும்பாலும் பிரயாணம்செய்து கொண்டிருந்திருக்கிறேன். அதனல் என்ஆத்தும கடமைகளைக் கவனிக்கவில்லை. ஞாயிற்றுக்கிழமை நான் பிறந்தநாள். அன்றுமுதல் ஓர்புது வாழ்வுதொடக்க உத்தேசித்திருக்கிறேன். போகிறவழியில் இருக்கும் சந்நியாசமடத்துக்குப்போய்ப் பாவசங்கீர்த்தனம்செய்து, ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பூசைக்கு அம்மாவுடன்செல்வேன். அவள் நன்மைவாங்கக் கிறுதிக்குச்செல்லகையில் நானும் எழுந்து போவேன். அவர்களுக்கு இது பெருமகிழ்ப்பையும், மகிழ்ச்சியையும் கொடுக்கும்."

"ஜோ, இதுஎவ்வளவு நல்லசெய்தி! அப்படியானல் நீ அர்ச். சூசையப்பர் திருநாளிலா பிறந்தாய்?"

"ஆம், அம்மாவுக்கு அர்ச். சூசையப்பர்மேல் அதிகபக்திஉண்டு. நான் நல்வழிக்கு வரும்படி இந்தஅர்ச்சியசிஷ்டரையே அவள்பிரார்த்தித்து வந்தாள்என நினைக்கிறேன்... அம்மாவிடமிருந்து கடிதம்வந்ததுமுதல் என்னைப்பற்றி நான் சிந்தித்துப்பார்த்தேன். இவ்வளவுகாலமும் நான் இப்படியெல்லாம் ஏன் நடந்தேனேதெரியவில்லை. ஆனல், என்னைநம்பும், சனிக்கிழமைக்குப்பின் நான் புதுமனிதன்" என ஜோ கூறினன்.

சனிக்கிழமைகாலை ஜோ தன்காரில் புறப்பட்டான். தாய்வீடுபோய்ச்சேர 250 மைல் போகவேண்டும். வீட்டில் இருந்தவர்களைப்பற்றி நினைத்துக்கொண்டே காரை வேகமாய்ச் செலுத்தினன். ஆனல், அவன்வாழ்வு இறுதியடைய இன்னும் சிலநிமிஷங்களே இருந்தன. சாவின்தூதன் பாதைதிரும்புகிறஇடத்தில் அவனை எதிர்பார்த்துநின்ருன். அது எப்படி நடந்ததோ தெரியாது. ஒருவேளை முந்தியஇரவு பெய்தமழையினல் வீதி நனைந்திருந்ததினல் எப்படியோ கார் பாதையைவிட்டுவிலக, காரின்அடியில் ஜோ குற்றுயிராய்க் கிடந்தான்.

விபத்துநடந்ததை எவருமேபார்க்கவில்லை. சிறிதுவேளைக்குப்பின் அந்தப்பக்கமாய் ஒருகார்வந்தது. அதன் சாரதி கீழேஇறங்கி வெகுசிரமத்துடன் ஜோவை வெளியே இழுத்தான். அவன் உடலெல்லாம் இரத்தம். அறிவின்றிக் கிடந்தான். அவனைவெளியே இழுத்தெடுத்தசாரதி உடனே தன் காரண்டைஓடினன். அங்கிருந்த சிறுவனைப்பார்த்து: "அந்தோனி, இந்தமனிதனுக்குக் கடுங்காயம்; அவனைத்தொடவே பயமாயிருக்கிறது; ஊர் இன்னும் கொஞ்சத்தூரத்தில்தான் இருக்கிறது; நான் காருடன்போய் உதவிக்குஆட்களை அழைத்து வருகிறேன்; நீ இங்கிருந்துகொள்; யாராவதுவந்தால் உதவிசெய்யும்படி கேள்" என்ருன்.

அந்தோனிக்குவயது பதினன்கு. காயம்பட்டவனைநோக்கி அச்சத்துடன் நடந்தான். யாராவது வருவாராஎன்று அங்கும் இங்கும் பார்த்தான். ஓடி ஒளித்துக்கொள்ளலாமா என்றும் நினைத்தான். அவ்வளவு பயங்கரமாயிருந்தது. கடைசியாக மனதைத் திடப்படுத்திக்கொண்டு காயம்பட்டவன் அருகில் முழந்தாளிட்டான்.

"இந்தஆள் செத்துப்போவாரோ?" எனப்பயந்தான். முந்தியஞாயிற்றுக்கிழமை தான் ஞானேபதேசப்பாடத்தில் கேட்டதுயாவும் அவன்நினைவுக்கு வந்தது: "ஒருவர் விபத்தில் அகப்பட்டுச் சாகுந்தறுவாயில் இருக்கிருர்.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# புதியபாராளுமன்ற அங்கத்தவர்கள்

## ஐக்கியதேசியக்கட்சி

1. திரு. டட்லி சேனநாயக—டெடிகமம்.
2. சேர். ஜோன் கொத்தலாவல—டொடன்கஸ்லந்த.
3. திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன—களனி.
4. ,, ஏ. இரத்நாயக-வடடேகமம்
5. ,, எம். டி. பண்டா — மாத்துறட்டை.
6. மேஜர் ஈ. ஏ. நுகவெல—கடுகண்ணுவை, 1-வது அங்கத்தவர்.
7. திரு. பி. பி. புலங்குலமதிசாவை—அனுராசபுரம்.
8. டக்றர் எம். சி. எம். கலீல்—கொழும்புநகர்மத்தி, – 2-வது அங்கத்தவர்.
9. திரு. ஏ. எவ். மொலமுறே—பலாங்கொடை, 1-வது அங்கத்தவர்.
10. ,, ஈ. டபிள்யு. மத்தியூ—பலாங்கொடை, 2-வதுஅங்கத்தவர்.
11. ,, வி. நல்லையா—கற்குடா.
12. இராசவாசல் முதலியார் டி. பி. ஜயசூரிய—ஜா-எல
13. திரு. ஏ. என். டி ஏ. அபெசிங்க—நீர்கொழும்பு.
14. திரு. யு. பி. உனம்புவெ—கொட்டகலை.
15. ,, ஆர். ஜி. சேனநாயக—தம்பதேனியா.
16. ,, ஈவான் ரி. தசநாயக—வரியப்போலை.
17. ,, கே. ஹேரத்—நிக்கவாத்தியா.
18. மேஜர் எம். ஜயவிக்கிரம—வெலிகமம்.
19. திரு. எம். சேனநாயக — மதவாச்சி.
20. ,, விக்றர் இரத்நாயக—தெனியாயா.
21. ,, எச். ஈ. பி. டி மெல்—தலவாக்கெல்லை.
22. ,, எம். டி. எச். ஜயவர்த்தன—ஹோருனை.
23. ,, எச். பி. றம்புக்வெல திசாவை—மனிப்பே,
24. ,, பி. ஏ. குறே—கழுத்துறை.
25. ,, ரி. பி. பனபொக்கே—கலகா
26. ,, ஈ. எல். சேனநாயக—கண்டி.
27. மேஜர் ரி. எவ். ஜயவர்த்தன—கொழும்புநகர் தெற்கு.
28. திரு. ரி. பி. பொகலியட்ட திசாவை — ஹொறலப்பொத்தானை.
29. ஜனுப் எச். எஸ். இஸ்மாயில் — புத்தளம்.
30. ஜனுப் எம். எம். இபிருஹிம் — பொத்துவில்.
31. திரு. ஹறல்ட் வொகம — நிவித்திக்கலை.
32. திரு. டபிள்யு. ஏ. றட்வத்தை—அப்புத்தளை.
33. ,, கே. வி. ஐ. சுகததாச—பண்டாரவளை.
34. ,, சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா—அகலவத்தை.
35. ,, பி. எச். சி. சில்வா — மஸ்கேலியா.
36. ,, பி. பி. சுமனதிலக — நுவரெலி.
37. ,, எஸ். டி எஸ். ஜயசிங்க—வெள்ளவத்தை-கல்கிசை.
38. ,, ஜே. ஏ. றம்புக்போத — அழுத்துநுவரை.
39. ,, என். எச். கீர்த்திரத்ன — கேகாலை.
40. ,, எம். டபிள்யு. ஆர். டி சில்வா—கம்பளை.
41. ,, எஸ். எச். மகாடியுல் வெலா—கலகிவா.
42. ,, டி. சி. டபிள்யு. கன்னங்கரா—பாணந்துறை.
43. ,, ஷேர்லி கோறியா — சிலாபம்.
44. ,, டபிள்யு. லீயோ பர்னண்டோ—புத்தளை.
45. ,, சிறில் ஈ. எஸ். பெரேரு—கொழும்பு வடக்கு.
46. ,, டி. பி வெலகெதர— குருநாகல்.
47. ,, எஸ். நடேசன் — காங்கேசன்துறை.
48. ,, ஏ. ஈ. பி. கிரிபெல்ல—கிரியெல்லை.
49. ,, ஜே. ஈ. அமரதுங்க-மிரீகமம்.
50. ,, எஸ். ஏ. பீரிஸ் — வதுளை, 2-வது அங்கத்தவர்.
51. ,, சாள்ஸ் எதிரிசூரிய — அம்பாந்தோட்டை.
52. மேஜர் சி. ஏ. தர்மபால — ஹக்மனை.
53. திரு. சிறில் அற்றிக்கலை—இரத்தினபுரி.
54. ,, அயன் டி. சொய்சா— அம்பலாங்கொடை-பலப்பிட்டி, 1-வது அங்கத்தவர்.

## ஐக்கியதேசிய கட்சியில் சேர்ந்து கொண்ட சுயேச்சைவாதிகள்

55. ஜனுப் ஏ. எம். மீர்ஸா—கல்முனை
56. ஜனுப் எம். ஈ. எச். முகம்மத் அலி—மூதூர்.
57. திரு. ஆர். பி. கதிர்காமர் — மட்டக்களப்பு.
58. திரு. எஸ். எம். இராசமாணிக்கம்—பட்டிருப்பு.

## ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி

1. திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக — அத்தனகலை.
2. திரு. எஸ். டி. பண்டாரநாயக—கம்பகா.
3. ,, பேர்னுட் அலுவிகார—மாத்தளை.
4. ,, சி. பி. டி சில்வா—பொலன்னறுவை.
5. ஜனுப் சி. ஏ. எஸ். மரைக்கார்—கடுகண்ணாவை
6. திரு. சி. ஆர். பெலிகம்மன—மவனெல்லை.
7. ,, ஹென்றி அபெவிக்கிரம—வட்டகாமம்.
8. ,, எச். பி. தென்னே — தம்பளை.
9. ,, டி. ஏ. இராஜபக்ஸ—பெலியத்தை.

## லங்காசமசமாஜகட்சி

1. டக்றர் என். எம். பெறேரு — றுவான்வெலை.
2. திரு. டபிள்யு. தஹநாயக—காலி
3. ,, சோமவீர சந்திரசிறி—மொறட்டுவா.
4. ,, டபிள்யு. நீல் டி அல்விஸ்—உடுகமம்.
6. ,, றெபேட் குணவர்த்தன—கோட்டே
7. ,, ஜே. சி. ரி. கொத்தலாவல—வதுளை, –1-வது அங்கத்வர்.
8. ,, எட்மண்ட் சமரக்கொடி—தெகியோவித்தை.
9. வில்லியம் டி சில்வா — அம்பலாங்கொடை-பலப்பிட்டி, 2-வது அங்கத்தவர்

## அ. இ. தமிழ்காங்கிரஸ்

1. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்—யாழ்ப்பாணம்.
2. ,, ரி. இராமலிங்கம் — பருத்தித்துறை.
3. ,, வி. குமாரசாமி— சாவகச்சேரி.
4. ,, ஏ. எல். தம்பியையா—ஊர்காவற்றுறை.

## சமஷ்டி

1. திரு. என். ஆர். இராசவரோதயம்—திரிகோணமலை.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### வத்திக்கானின் முதல்மறியற்காரர்

"வத்திக்கானின் முதல்மறியற்காரர்" என அறியப்படுகிறவரான 9-ம்பத்திநாதபாப்பானவருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் அருளுவதற்கான விசாரணை அநேகவருடகாலம் நடைபெறுமலிருந்து சமீபத்திலே பாப்பரசரின் விக்கார் ஜெனறலான கருதினல் மிக்காரு ஆண்டவரது தலைமையில் அமைக்கப்பட்டிருக்கும் விசேஷதிமன்றத்தால் திரும்பவும் தொடக்கப்பட்டிருக்கிறது. அர்ச். பேதுருவானவர் நீங்கலாக 9-ம்பத்திநாதபாப்பானவரே மற்றெந்தப் பாப்பானவரைக் காட்டிலும் அதிககாலம், அதாவது 31 வருடகாலம் திருச்சபையை ஆட்சி செய்திருக்கின்றார். அத்துடன் இவரது ஆட்சி சரித்திரசம்பவம் நிறைந்ததுமாகும்.

இங்கிலாந்திலும் வேல்சிலும் இவர் மறுபடியும் மேற்றிராணிமாரின் அதிகாரவரிசையை ஏற்படுத்தினர். ஒரு தொகையான ஆங்கிலேய வேதசாட்சிகளுக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளினர். கருதினல் வைஸ்மன், கருதினல் மனிங் ஆகியஇருவருக்கும் செஞ்சீராவழங்கினர். தேவமாதாவின் மாசில்லாதஉற்பவத்தை விசுவாசசத்தியமாகப் பிரகடனஞ்செய்தார், வத்திக்கான் மகாசங்கத்தைக் கூட்டி, அதிலே பாப்புமாரின் வழுவாவரத்தையும் விசுவாசசத்தியமாகப் பிரசித்தஞ்செய்தார். ஆராதனைமுறை சம்பந்தமாயும், சந்நியாசவாழ்க்கை சம்பந்தமாயும் அவர் செய்தருளிய திருத்தங்கள் உலகமுழுவதிலுமே திருச்சபையின் ஞானசீவியத்தை மறுமலர்ச்சியடையச் செய்தன.

சமதர்மவாதம், அபேதவாதம், காரணவாதம், பிறிமேசன்சபை ஆதியனஉட்பட அக்காலத்தில்எழுந்த தப்பறைகளைக் கண்டித்து இவர் விடுத்த "குவான்ராகியூரு" எனும் பேர்பெற்ற சாதாரணநிருபமானது வேதவிசுவாசத்தையும், கத்தோலிக்கசமயத்தையும் பரிபாலனஞ்செய்து பாப்புமார்களால் விடுக்கப்பெற்ற தலைசிறந்தநிருபங்களில் ஒன்றெனக்கருதப்படுகிறது. ஆனல், இவரது ஆட்சியிலே பரிசுத்தஸ்தானத்துக்குப் பெரிதும் துக்ககரமான சம்பவங்களும்நிகழ்ந்தன. இவைகள் அதிகமாக இத்தாலியிலும், மற்றும்ஐரோப்பிய நாடுகளிலும் ஏற்பட்ட அரசியற்கிளர்ச்சிகளாலே நிகழலாயின. அதன் விளைவாகப் பாப்பரசின் நாடுகள் இல்லாதொழிந்தன. அவரின்சொந்தப் பிரதமரான றொஸ்ஸிஅவர்கள் மந்திரிகாரியாலய வாயிற்படிகளில்வைத்துக் கொலைசெய்யப்பட்டனர். பாப்பானவருமே மாறுவேடம்பூண்டு கயெற்ருவுக்குத் தப்பியோடவேண்டியவரானர். ரோமைநகர் தேசதுரோகிகளினதும், பாதகத்துக்கு அஞ்சாதவர்களினதும் ஆட்சிக்குட்பட்டது. பாப்பானவர் ரோமைநகரிலுள்ள குயீறினல் மாளிகைக்குத் திரும்பக்கூடியவராகுமுன் பதினெட்டுமாதங்கள் கழிந்தன.

இருபதுவருடங்களின் பின்னர் ரோமைநகர் விக்றர் இம்மனுவேல்அரசனல் கைப்பற்றப்பட்டபோது பாப்பானவர் வத்திக்கானின் மறியற்காரராயினர். இவர் தமது இளம்பிராயத்திலே பாப்பரசரின் "நோபிற்காட்" எனப்படும் காவலர்படையில் சேர்ந்துகொள்ள முயன்றார். ஆனல், சுகத்தாழ்வுகாரணமாக அதிற்சேர முடியாதவரானர். சிலவருடங்களின் பின் இவர் குருத்துவபதவிக்குப் படிக்கத் தொடங்கினர். கடைசியாக ஒன்பதாம் பத்திநாத பாப்பானவர் தமது 85-ம்வயதிலே 1878-ம் ஆண்டு மாசி 17-ந்திகதி இறைவனடி சேரலாயினர்.

### யாத்திரைக்கப்பல்

பார்சலோனநகரிலே சமீபத்தில்நடந்தேறிய சர்வதேச சற்பிரசாதமகாநாட்டுக்கு வடஅமெரிக்காவிலிருந்து 3 மேற்றிராணிமார்களையும், 13 குருசிரேஷ்டர்களையும், 43 குருமாரையும், மற்றும் யாத்திரிகர்களையும் ஏற்றிச்சென்ற இன்டிப்பென்டன்ஸ் எனும் பிரயாணக் கப்பலிலே திவ்வியபூசைகள் நிறைவேற்றுதற்கென்று அடுத்தடுத்தார்க்கற்கள் சமயோசிதமாக அமைக்கப்பட்ட பியானேவாத்தியங்கள் பிரயோகிக்கப்படலாயின. பிரயாணத்தின்போது நாள்தோறும் காலையிலே அக்கப்பலின் சங்கீதவிழாச்சாலையிலே திவ்வியபூசைகள் நிறைவேறின. இந்தச்சாலை இருநூறு யாத்திரீகர்ளுக்குப் போதியதாயிருந்தது. சாயந்தரவேளை செபமாலை சொல்லப்பட்டுவந்தது. யாத்திரீகர்களில் ஒருவர் 72 வயசுடையவரும், ஆசீர்வாதப்பர்சபையைச் சேர்ந்தவருமான தொம் ஜுவான் மாட்ரினெஸ் சுவாமியார். இவர் மெக்சிக்க வேதகலாபனையின்போது வேதவிரோதிகளால் வெகுவாகத்துன்புறுத்தப்பெற்றபின் நாடுகடத்தப்பட்டவர்.

### மனந்திரும்பிய பாதிரியார்

தற்போது 72 வயசுடையவரான திரு. பிளேயிட் கீலர் அவர்கள் ஓர் கத்தோலிக்க குருவாகவேண்டி அதற்குஆயத்தம் செய்துவருகிறாரென அறிவிக்கப்படுகிறது. இவர் எபிஸ்கோபல் புறொட்டஸ்தாந்த சபையிலிருந்து சிலவருடங்களின்முன் மனந்திரும்பிய ஓர்பிரபல பாதிரியாராவர். பெட்வோட்நகர் வாசியான இவர் 50 வருடங்களின்முன் றேனேக் கல்லூரியில்பயின்று எபிஸ்கோபல் புறொட்டஸ்தாந்தசபையில் ஓர் பாதிரியாராயினர். ஆயினும் கத்தோலிக்க திருமறையில் மனங்கவரப்பெற்றவராய் 1917-ம் ஆண்டு அதில் சேர்ந்துகொள்ளலாயினர். இவர் சாதாரண கத்தோலிக்கரின் அப்போஸ்தல தொண்டுமூலமாகக் கத்தோலிக்க திருமறையை விருத்தியடையச் செய்வதிலே தமது சீவியத்தில் அநேகவருடங்களைச் செலவிடலாயினர். றிச்மண்ட் நகரின் பீற்றர் இறெற்றன் மேற்றிராணியாரது கேள்வியின்பேரிலே எம்மிற்ஸ்பேர்க் எனுமிடத்திலுள்ள மவுண்ட் சென்மேரி குருமடத்தில் ஓர் குருத்துவமாணவராக இவர் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றார்.

—கம்யூனிஸ்த சீனவிலே பிறநாடுகளைச்சேர்ந்த கத்தோலிக்கமிஷனரிமாராய்இன்னும் 1,650பேரே இருந்து வருவதாகக் ஹொங்கோங் தீவிலே மதிப்பிடப்பட்டிருக்கிறது. இவர்களில் குருமார் 1,121 பேரென்றும், பிறதர்மார் 66 பேரென்றும், கன்னியாஸ்திரிமார் 438 பேரென்றும், குருத்துவ மாணவர் 25 பேரென்றும் அறிவிக்கப் படுகிறது.

# இறைவன் அழகு

"நோயிலடிகள்" — தாய்நாடு

1. அழகழ கென்றுநான் அலைந்ததும் போதுமே,
அழகினல் மயங்கிநான் பிறழ்ந்ததும் போதுமே,
அழகெலாம் படைத்ததோர் அளவில அழகு நீ
பழையதும் புதியதும் ஆவதோர் அழகு நீ.

2. நீலமார் வானிலே, நிலவிலே, வெயிலிலே,
கோலமார் முகிலிலே, குலவிடுங் காற்றிலே,
சாலவும் விளங்கிடும் மின்னிலே, மீனிலே
மாலுறும்[1] அழகெலாம் உனதழ கல்லவோ?

3. தொலைவிலே நீலமாய்த் தோன்றிடும் மலையிலே,
மலையிலே தவழ்ந்திடும் பலநிற முகிலிலே,
மலையினின் றிழிதரும்[2] வெள்ளிய அருவியில்
துலங்கிடும் அழகெலாம் உனதழ கல்லவோ?

4. தண்ணிழற் பொழிலிலே, தாமரைக் குளத்திலே,
தென்னையந் தோப்பிலே, இளமரக் காவிலே,
செந்நெலிற் செய்யிலே[3] கன்னற்[4] புனத்திலே
மன்னிய அழகெலாம் உன்னழ கல்லவோ?

5. தன்னருங் குழவியைக் கண்ணுறும் அளவிலே,
அன்னையின் கண்ணிலே அன்பினல் தோன்றிடும்
இன்னமு தன்னதோர் எழிலுறும் ஒளியிலே
மன்னிய அழகெலாம் உன்னழ கல்லவோ?

6. இலைமலி செடியிலே, கொடியிலே, மரத்திலே,
பலபல வடிவமும் பலபல வண்ணமும்
சொலவொண நறுமணம் பொருந்திய பூவிலே,
நிலையுறும் அழகெலாம் நினதழ கல்லவோ?

7. மல்லியில், புன்னையில், அலரியில், தாழையில்,
முல்லையிற், கொன்றையில், முளரியில்,[5] குவளையில்,
அல்லியிற், காந்தலில்,[6] ஆத்தியில், வெட்சியில்,
சொல்லரும் அழகெலாம் உன்னழ கல்லவோ?

8. வாழையில், தென்னையில், பெண்ணையில்,[7] கமுகினில்,
தாழையில், மூங்கிலில், வேங்கையில், கோங்கினில்,
மாழையில்,[8] ஆத்தியில், ஆலினில், அசோகினில்,
வாழ்வுறும் அழகெலாம் உனதழ கல்லவோ?

9. கிழங்கிலே, வேரிலே, முளையிலே, கொம்பிலே,
தழையிலே, இலையிலே, தளிரிலே, அரும்பிலே,
எழிலுறு மலரிலே, காயிலே, கனியிலே,
வழிந்திடும் அழகெலாம் உனதழ கல்லவோ?

10. மயிலிலே, புறவிலே,[9] வண்டிலே, தும்பியில்,
குயிலிலே, கிளியிலே, கோழியில், பூவையில்,[10]
கயத்தினுள் மீனிலே, அனத்திலே, நாரையில்
வயங்கிடும் அழகெலாம் உனதழ கல்லவோ?

11. யானையில், மடங்கலில்,[11] வேங்கையில், பாம்பினில்,
பூனையில், ஞமலியில்,[12] புரவியில்,[13] எருதினில்
மானிலே, ஆனிலே,[14] அணிலிலே, முயலிலே
காணலாம் அழகெலாம் உனதழ கல்லவோ?

12. மணியிலே, பொன்னிலே, மனையிலே, நகரிலே,
துணியிலே, துகிலிலே, உடையிலே, நடையிலே,
அணியிலே, பூச்சிலே, பேச்சிலே, சிரிப்பிலே
பிணிப்புறும் அழகெலாம் உனதழ கல்லவோ?

13. கலையிலே, கவியிலே, இசையிலே, பாட்டிலே,
குழலிலே, யாழிலே, குரலிலே, நரம்பிலே,
எழுத்திலே, உரையிலே, சிற்பிகள் தொழிலிலே
தழைத்திடும் அழகெலாம் உனதழ கல்லவோ?

14. அறத்திலே, தவத்திலே, அன்பிலே, அருளிலே,
அறிவிலே, வலியிலே, அரசிலே, கொடையிலே,
மறத்திலே,[15] அரணிலே, விறலிலே,[16] புகழிலே
சிறந்திடும் அழகெலாம் உனதழ கல்லவோ?

(1) மால்உறும்—மயக்கம் உறுவதற்குக் காரணமாகிய
(2) இழிதரும்—இறங்கும்
(3) செய்—வயல்
(4) கன்னல்—கரும்பு
(5) முளரி—தாமரை
(6) காந்தள்—கார்த்திகைப்பூ
(7) பெண்ணை—பனை
(8) மாழை—மா
(9) புறவு—புறு
(10) பூவை—"மைன"
(11) மடங்கல்—சிங்கம்
(12) ஞமலி—நாய்
(13) புரவி—குதிரை
(14) ஆன்—பசு
(15) மறம்—வீரம்
(16) விறல்—வெற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**ஆனிமாதம் 1952**

| | | | |
|---|---|---|---|
| வெ | 13 | அ. பதுவை அந்தோனியார் | (வெ) |
| சனி | 14 | அ. பசிலியார் | (வெ) |
| ஞா | 15 | இஸ்பிரீத். ஆகமனத்தின் பின் 2-ம் ஞாயிறு — அ. வீத்தப்பர் | (வெ) |
| திங | 16 | அ. இராசேந்திர அருளப். | (வெ) |
| செ | 17 | அ. அவித்தப்பர் | (வெ) |
| புத | 18 | அ. எபிரேம் | (வெ) |
| வி | 19 | அ. சுலியானம்மாள் | (வெ) |


# சத்தியவேத பாதுகாவலன்

1952-ம் ஆண்டு
ஆனிமாதம் 12-ந் திகதி


## வாலிபரும் வருகாலமும்

பாராளுமன்றத்திலே யாழ்ப்பாணப் பிரதிநிதியும், கைத்தொழில்—கடற்றொழில் மந்திரியாருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்அவர்கள் சென்ற 8-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணமுற்றவெளியிலே சம்பிரமமாகத் தமக்கு அருளப்பெற்ற வரவேற்பு உபசாரத்தின்போது எடுத்துக்கூறிய இருபொன்மதிகளையும் நம்தமிழ் வாலிபர்கள் ஊன்றிச்சிந்தித்துத் தங்கள் எதிர்காலவாழ்க்கையைச் சுபீட்சமுடையதாக்கிக் கொள்ளுமாறு அனைவரையும் பரிவாகவேண்டுகின்றோம்.

யாழ்ப்பாணக்குடாநாடு வளர்ந்து பரந்துகொண்டு வரமாட்டாது; ஆனால், முன்னிருந்ததுபோலவே, இன்றிருப்பதுபோலவே என்றைக்கும் இருந்துவரும். ஆனால், தமிழ்ச் சமூகம் வளர்ந்து பரந்துகொண்டுதான் இருக்கும்; அதனால் தமிழ்வாலிபர்கள் யாழ்ப்பாணக்குடாநாட்டுள்ளேயே இனிமேலும் கட்டுப்பட்டிருக்க நினையாது ஆனையிறவுக்கப்பால் செல்வவளம்பொருந்திய தென்பகுதிக்குச்சென்று அங்கே ஊக்கமாகக் கமத்தொழிலில் ஈடுபட்டுத் தங்கள் பொருளாதார நிலையைவிருத்திசெய்து உயர்ச்சியடையவேண்டும் என்பதே மந்திரியாரின் முதலாவது பொன்மதியாகும். எமது நாட்டினதும், அதனை வருகாலத்திலே சீருற்று விளங்கச் செய்யவேண்டிய எமது கற்றவாலிபர்களினதும் ஈடேற்றம் இருமுக்கியதொழில்களிலேயே ஈண்டுதங்கியிருக்கிறது. அவற்றில்ஒன்று, கமத்தொழில். மற்றது கைத்தொழில். இவற்றின் முக்கியத்துவத்தை இனிதே உணர்ந்த அரசாங்கம் அவற்றின் விருத்திக்கானவழிவகைகளைச்செய்வதிலே அல்லும் பகலும் மிகுந்தகருத்தாய் இருந்துவருகிறது. இரணைமடுக்குள அணைக்கட்டு மேலும்உயர்த்தப்பட்டு, அதனாலே இன்னும்அதிகமான காணிகளுக்கு நீர்ப்பாசன வசதிகள்செய்யப்பெற்றுள்ளன.

இன்னும் மலாய்நாட்டிலிருந்து திரும்பியவர்களும், திரும்பவிருப்பவர்களுமான யாழ்ப்பாணத் தமிழர்கள் அக்கராயன்குளத்தையடுத்துக் குடியேறி அங்கே கமத்தொழில் நடத்துவதற்கென அக்குளத்தையடுத்துக் காணிவழங்கும் திட்டம்ஒன்று சித்தஞ்செய்யப்பெற்றுள்ளது. இன்னும் வடமாகாணத்திலே வவுனியா, மாதோட்டம், முல்லைத்தீவு ஆகியாம் பகுதிகளிலும் கமத்தொழிலை விருத்திசெய்வதெற்கென்று அரசினர் பலவிதஉதவிகளும், வசதிகளும் செய்துவருகின்றனர். பழம் நழுவிப்பாலில் விழுந்தவாறாய் இந்த வேளை சேர். ஒலிவர் குணதிலக அவர்கள் கமத்தொழில்—உணவு மந்திரியாராகநியமனஞ்செய்யப்பெற்றிருப்பதும் ஓர்நல்லஅதிஷ்டமேயாகும். மேலும் கைத்தொழில்விருத்தி சம்பந்தமாகவும் காம் தீவிர முயற்சிகள் எடுத்துவருவதாக நமது கைத்தொழில் மந்திரியார் உறுதிவாக்களித்திருக்கின்றார்.

நிற்க, அவர் தமிழ்வாலிபமக்களுக்கு எடுத்துக் கூறிய இரண்டாவது பொன்மதிதான்யாது? கம்யூனிஸ்த—சமசமாஜிஸ்தமுதலாமபொதுவுடைமைத் தீயசக்திகளில் மதிமோசமாகச்சிக்கிக்கொள்ளாது, அவற்றினின்றும் மதியூகமாக விலகித்தப்பிக்கொள்ள வேண்டுமென்பதே அந்தநன்மதியாகும். ஆதலால், நமது வாலிபஉலகம் அவர்கூறிய இருபொன்மதிகளையும் நன்மனதாய் வரவேற்றுப் பொதுவாகத் தமிழ்மக்களதும், சிறப்பாகத் தங்களதும் சுபீட்சத்துக்காக அபிமானத்துடன் உழைக்குமென எதிர்பார்க்கின்றோம்.

---

இஸ்பிரீ. ஆகமனத்தின் பின்

## 2-ம் ஞாயிறு

**சுவிசேஷ வாசிப்பு**

(லூக். 14: 16—24)

அக்காலத்தில் யேசுநாதர் பரிசேயருக்குச் சொன்ன உவமையாவது: ஓர்மனிதன் பெரிய விருந்தை முஸ்திப்புச்செய்து அதற்கு அநேகரை அழைத்தான். பின்பு அவன் விருந்து வேளையில், யாவும் இப்போது தயாராயிருக்கின்றமையால் அழைக்கப்பட்டவர்கள் வரும்படி அவர்களுக்குச் சொல்லத் தன் ஊழியனை அவர்களிடம் அனுப்பினான். அவர்கள் எல்லோரும் ஒருப்படப் போக்குச் சொல்லத் தொடங்கினார்கள். முதல்வன் அவனைநோக்கி: நான் ஒருதோட்டத்தை வாங்கினேன்; அகத்தியமாய்ப்போய் அதைப் பார்க்கவேண்டும்; என்னை மன்னித்துக்கொள்ள உம்மை மன்றாடுகிறேன் என்று அவனுக்குச் சொன்னான். வேறொருவன்: ஐந்து ஏர்எருதுகளை வாங்கினேன்; அவைகளைப் பரீட்சிக்கப்போகிறேன்; ஆதலால் என்னை மன்னிக்க உம்மை மன்றாடுகிறேன் என்றான். மற்றொருவன்: கலியாணஞ் செய்துகொண்டேன்; ஆகையினால், நான் வரக்கூடாதென்றான். ஊழியன் திரும்பி வந்து இவைகளைத் தன் எசமானுக்கு அறிவித்தான். அப்போது குடும்பத்தெசமான் சினந்து, தன் ஊழியனைநோக்கி: நீ சீக்கிரத்தில் புறப்பட்டு ...ரத்தின் பெரிய வீதிகளுக்கும், தெருக்களுக்கும் போய்த் தரித்திரரையும், முடவரையும், குருடரையும், நொண்டிகளையும் இங்கே கூட்டிக்கொண்டுவா என்றான். பின்பு ஊழியன்: ஆண்டவனே, நீர் கட்டளையிட்டபடியே செய்தாயிற்று. இன்னும் இடமிருக்கிறதென்று சொன்னதற்கு, எசமான் ஊழியனைநோக்கி: நீ புறப்பட்டு வழிகளிலும், வேலியோரத்திலும் போய் என்வீடு நிரம்பும்படியாய்ச் சனங்களை உள்ளே வரும்படி கட்டாயப்படுத்து. ஏனெனில், அழைக்கப்பட்ட அம்மனிதரில் எவனும் என்விருந்தைச் சுவைபார்ப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று திருவுளம்பற்றினார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

---

# குருத்துவ தங்கயூபிலி விழா



※

யூபிலிநாயகர்
வண.
சாள்ஸ் எஸ். மத்தியூஸ்
சுவாமிஅவர்கள்
1902—1952

※

தனதுபெருமைவாய்ந்த சரித்திரத்திலே சம்பத்திரிசியார் கல்லூரியானது எத்தனையோ பெரும் யூபிலிவிழாக்களைப் பெருமிதமாகக் கொண்டாடியிருக்கின்றது. அப்பெருவிழாக்களில்ஒன்று சென்ற 7-ந் திகதி சனிக்கிழமைபிற்பகல் அக்கல்லூரிமைதானத்திலே சம்பிரமமாக நிகழலாயிற்று. அன்றைய குருத்துவ தங்கயூபிலி விழாவின் குருநாயகமாய் விளங்கியவர், அக்கல்லூரித்தலைவராய் அகில இலங்கையிலும் பிரஸ்தாபமுற்று விளங்கியிருந்தவரான வண. சாள்ஸ் எஸ். மத்தியூஸ் O. M. I., B. D., L. L. D. சுவாமியவர்களே. இவ்விழாவை முன்னிட்டுக் கல்லூரிமைதானமானது பலவர்ணத் துவசங்களாலும், பசுந்தளிர்களாலும், பன்னூற்றுக்கணக்கான மின்சாரதீபங்களாலும் அழகுறச் சிங்காரிக்கப்பெற்று அளித்துநின்ற ஆனந்தகாட்சியோ பெருமாட்சியாயிருந்தது. கைத்தொழில்—கடற்றொழில் மந்திரியார் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்அவர்கள்தலைமையில் நடந்தேறிய இவ்விழாவிற்குக் கல்லூரித்தலைவரதும், விழாக்கழகத்தினதும் அழைப்பின்பேரிலே பலகுருப்பிரசாதிகளும், பெருந்திரளானபிரமுகர்களும, பெண்மணிகளும் சமுகமளித்திருந்தார்கள். அவ்வேளை யூபிலிநாயகருக்குப் புனையப்பெற்ற பூமாலைகளையும், புகழ்மாலைகளையும் கவலித்தபோது அவர் எல்லவர் உள்ளங்களையுமே தமது அன்பாலும், அரியதொண்டுகளாலும் தம்பால் கவர்ந்திருந்தாரென்பது தெற்றெனப் புலனாயிற்று.

யூபிலிநாயகரின் பழையமாணவரான மந்திரியார் பொன்னம்பலம்அவர்கள் பேசியபோது: கல்வித்துறையில் பாராட்டத்தகுந்த அரும்பெருந்தொண்டுகள்ஆற்றிய இப்பெருங்குரவருக்கு எனது தாழ்மையான சோபனவாழ்த்தையும், மீசுரமதிப்பையும் சமர்ப்பிப்பதிலே ஆனந்தமும், பெருமையும் அடைகின்றேன்; மூன்றுதலைமுறைகளைச்சேர்ந்த தமிழ்மக்கள் சுவாமிகளை என்றைக்கும் அன்புடனும், நன்றியறிதலுடனும் நினைவுகூர்வார்கள்; வடபகுதியிலே சுவாமிகள் கல்விக்காகப் பெரும்போராட்டம்நடத்தியிருக்கின்றார். ஓர் பிறநாட்டினராக இருந்தபோதிலும் இந்நாட்டுமக்களின் கருத்துகள் நோக்கங்களுடன் அவர் கலந்துகொள்ளலாயினர். அதனால் இவரையும் ஓர் தமிழ்மகனென்றே கொள்ளவேண்டும்; சம்பத்திரிசியார் கல்லூரிக்கும், யாழ்ப்பாணத்திற்கும் அவர் இன்னமும் பல்லாண்டு பணியாற்றவேண்டுமென்பதே எனது மனப்பூர்வமான ஆசையாகுமெனக் கூறினின்றார்.

மந்திரியாரைத் தொடர்ந்து பரமேஸ்வரக்கல்லூரிஅதிபரும், பாராளுமன்றத்திலே காங்கேசன்துறைப் பிரதிநிதியுமான திரு. எஸ். நடேசன் அவர்கள் பேசியவிடத்து: அந்தநாளிலே திருச்சிறைப்பளியில் தாம் கல்வி கற்றபோது, தமது பிரதம ஆசிரியராக விளங்கியிருந்தவர், வண. மத்தியூஸ் சுவாமிகளைப்போலும் ஓர் பெரியகல்விமானாகிய வண. பேட்றம் சுவாமிகளே என்பதை ஞாபகத்திற்குக் கொணர்ந்தார். யூபிலிநாயகர் இலங்கையிலே சமயஸ்தாபன பாடசாலைகளுக்காகப் போராடிய மகத்துவம்வாய்ந்த ஒருவரென்று அவரது வீரத்துவத்தைப் புகழ்ந்தார். வட இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலே அவர் யாதுவேற்றுமையுமின்றியே தமிழரோடு ஓர் தமிழராய்ச் சேர்ந்து புழங்கிவருவதாலே யாழ்ப்பாணமக்கள் அவரை ஓர் தமிழ்ப்பெருமகனை எண்ணிச்சங்கித்துவருவது பொருத்தமுடையதாகுமெனமொழிந்தார். அதன்மேல் வடமாகாணஏசன்றரான திரு. பி. ஜே. ஹட்சன் அவர்கள் ஹாஸ்யந்தேங்க நிகழ்த்திய சொற்பொழிவிலே சுவாமிகளின் போற்றற்பால தொண்டுகளையெல்லாம் அங்கு சமூகமளித்திருந்தாரெல்லாம் புளகாங்கிதம் கொள்ளும்படியாக எடுத்துக்கூறி அவருக்குப் புகழ்மாலை சாற்றினின்றூர்.

கல்லூரிப் பழையமாணவர் சங்க தலைவராகிய சேர் சிற்றம்பலம் காடினர்அவர்கள் யூபிலி நாயகருக்குப் 12,000 ரூபா கொண்ட ஓர் பொற்கிழிவழங்கினூர். அதனை நால்மடங்காகப் பெருக்கித் தகுதிவாய்ந்த வறிய மாணவர்களுக்குச் சர்வகலாசாலையிலே வித்தியாவெகுமதிகள் வழங்கும் நிதியாக்கப்போவதாகத் தெரிவித்துப்பழைய மாணவர்கள்பேரால் யூபிலி நாயகருக்குச் சோபனங்கூறலாயினர்.

கல்லூரிஅதிபர் அதிவண. லோங்சுவாமியவர்கள் பேசியபோது: ஓர்வழியில் நானும் மத்தியூஸ்சுவாமியவர்களின் பழைய மாணவனே; அவர் நான் 1911-ம் ஆண்டு அயர்லாந்தில் கல்வி பயின்றுகொண்டிருந்த கலாசாலைக்கு வந்தார்; அவர்பேசியதைக்கேட்டதும் நானும் யாழ்ப்பாணம் செல்லவேண்டுமென என்மனம் திரும்பியது; அவர் சுடரைஏற்றுகிறவர்; ஆயிரக்கணக்கானமக்களின் இதய பீடத்திலே அவர் சுடரைக் கொளுத்தியிருக்கிறூரெனக் கூறித் தம்முடையவும், வரவேற்புக்கழகத்தினதும் அழைப்பின் பேரிலே அங்குசமூகமளித்திருந்த அனைவர்க்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

ஈற்றில் யூபிலிநாயகர்எழுந்து முத்தொடு பொன்சொரியும்படியாக அளித்தபதிலிலே கருணை நிதியான சர்வேசுரன் தம்மை ஓர் குருவாக்கியதையும், குருத்துவ தங்கயூபிலியைத் தாம்கண்டுகளிக்கச் செய்ததையும், அவர் தம்மை வழிநடாத்திவந்த அற்புதவிதத்தையும் சிறப்பாகவும், எல்லோரும் சிந்தைகளிக்கும்படியாகவும் விரிவாக எடுத்துக் கூறிச் சகலருக்கும் நன்றிதெரிவித்ததும் விழாஇனிதே நிறைவாயிற்று. சுபம்!

## கத்தோலிக்க குடும்பம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தவேண்டும். பரிசுத்த திருக்குடும்பத்தின் சாயலிலே நம் ஒவ்வொருவரின் குடும்பமும் இருக்க நாம்முயலவேண்டும். நாம்கற்றறிந்த கிறீஸ்தவ சாங்கோபாங்கத்துக்கடுத்த புண்ணியங்கள் நமது குடும்பசீவியத்திற்கு அஸ்திவாரமாயிருக்க வேண்டும். நம்மைச்சுற்றியிருக்கும் இதர மதஸ்தர்களுக்கு நமதுகத்தோலிக்க குடும்பம் ஓர் எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும்.

மெய்விவாகம் என்னும் பரிசுத்ததேவதிரவிய அனுமானத்தால் புருஷனும்ஸ்திரியும் பந்தப்பட்டு, அவர்களது அன்பின் பலன்களாகிய பிள்ளைகளைக் கடவுளுக்கு உகந்தவர்களாக வளர்த்துக் கண்காணித்து வருதலே குடும்பசீவியத்தின் இரகசியம். குடும்பசீவியம் ஒருவிளையாட்டல்ல; மிகவும் பொறுப்புடைய ஒருஅந்தஸ்து. தேவன் தமது சாயலாகப் படைக்கப்பட்டபிள்ளைகளின் பொறுப்பை ஒப்படைக்க அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட எத்தனங்கள்நீங்கள். ஆகவேநீங்கள் தேவப்பிரதிநிதிகள். உங்கள் பாரம்மிகப் பெரியது. இத்தகையபாரமான நுகத்தடியைஇலகுவாக்குவதும், பாரமாக்குவதும் உங்கள்கையில் தான் இருக்கிறது. குடும்பசீவியத்தின் பாரத்தை இலகுவாக்கிக்கொள்ள ஒரேயொருமருந்து தான்உண்டு. அதுதான் அன்பு என்னும்மாத்திரை. இந்தஅன்பினால் துன்பம் இன்பமாக மாறும். சிலுவை கசப்பாகத் தோன்றாது. கஸ்தி, வருத்தம், கிலேசம் ஒன்றும் பெரிதாகத் தோன்றாது. நாம் சிநேகிக்கிறவர்களுக்காக என்னசெய்தாலும் போதுமென்றிராது. இதுவே அன்பின்குணம்.

ஆகவே, குடும்பசீவியத்தின் வெற்றிக்கு ஆதாரமாயிருப்பது அன்பு. கணவனும் மனைவியும் ஒருவருக் கொருவர் அன்பு கொண்டிருக்கவேண்டும். தாய் தந்தையர் பிள்ளைகளிடம் பரஸ்பர அன்புகொண்டு இருக்க வேண்டும். இன்னும் குடும்பத்திலுள்ள ஏனையோர், மாமன் மாமியார், ஒவ்வொருவரிடையேயும் அந்நியோன்னிய சிநேகம் இருக்கவேண்டும். இந்தஅன்பு பேருக்குமட்டும் இருப்பது போதாது. உண்மையான அன்பு கிரிகைகளில்தோன்றும் அன்பாக பிறரின்அவசரங்களை அறிந்து அவர்களுக்கு வலிய உதவிசெய்யும் அன்பாக நல்ல சமாரித்தனிடம் விளங்கிய தேவ அன்பாக இருக்கவேண்டும். அப்படி இருப்போமாகில் நாம் ஒருவரொருவரது குற்றங்களைச் சகித்துக்கொள்வோம். பிறரிடம் காய்மகாரம்,பொறுமைகொள்ள மாட்டோம். பிறரது கீர்த்தியைக் குலைக்க எண்ணமாட்டோம். இவ்விதமிருந்தால் குடும்பங்களில் சமாதானம் நிலவும். ஒழுக்கம்வளரும். அதைச்சேர்ந்த ஒவ்வொருவரும் உத்தமர்களாகி விடுவார்கள்.

(தொடரும்)

## சுதேச வர்த்தமானம்

### திவ்வியநற்கருணைத் திருநாள்

நம்முடைய ஆசனக்கோவிலிலே திவ்வியநற்கருணைத் திருநாள் ஆனி மாதம் 15-ந்திகதியாகிய வருகிற ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவிருக்கிறது. காலை 7 மணிக்குப் பெரியபாடற்பூசை நிறைவேறும். சாயந்தாம் வேஸ்பர்பாடியதும் திவ்விய நற்கருணைநாதரின் திருப்பவனியானது வழமைபோலப் பத்திச்சிறப்பாய் நடந்தேறும். அன்பின் தேவதிரவியானுமானமாகிய அதிபூசித திவ்வியநற்கருணையில் எழுந்தருளியிருக்கின்ற நமது தெய்வீக[illegible] திருப்பவனி[illegible]விருக்கும் வீதிகளை அவற்றின் இருமருங்கும் வசிக்கின்ற கத்தோலிக்கமக்கள் முன்போல அழகுறச் சிங்காரித்து அவர்மட்டிலே தமக்குள்ள வணக்கவழிபாட்டைப் பிரசித்தமாகக் காண்பித்து அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்களாக!

### இராணியாரின்மகிமைப்பட்டம்

மாட்சிமைதங்கிய இரண்டாவது எலிசபேத் இராணியார் முதன்முதலாகத் தமது பிறந்தபெருநாள் சந்தோஷத்தை முன்னிட்டு இலங்கைப் பிரமுகர்களிலே தற்போது அமெரிக்க ஐக்கியதேசத்தில் இலங்கை ஸ்தானிகராக இருந்துவருகின்ற திரு. ஜி. சி. எஸ். கோறியா அவர்களுக்கும், பிரபல சரிதாசிரியரான டக்றர் போல் ஈ. பீரிஸ் அவர்களுக்கும் நைற்பட்டமும், மற்றும் 18 பேருக்குச் சி. பி. ஈ. — ஓ. பி. ஈ.—ஐ. எஸ். ஓ.—எம். பி. ஈ. முததாம் பட்டங்களும் வழங்கியிருக்கின்றூர்.

### சுதேசமகிமைப்பட்டம்

மகாராணியாரின் ஜனனவிழாச் சந்தோஷத்தின்பேரிலே கவர்னர்—ஜெனறல் சோல்பரிபிரபு அவர்கள் இலங்கைப் பிரமுகர்கள் 46 பேருக்குச் சுதேச மகிமைப்பட்டங்கள் வழங்கியிருக்கின்றூர். இவர்களில் எழுவருக்கு ஜே. பி. பட்டமும், இருவருக்குத் திசாவைப் பட்டமும், மூவருக்கு இராசவாசல் முதலியார்பட்டமும், மூவருக்கு இராட்டமகாத்மையாபட்டமும், எழுவருக்கு முதலியார்பட்டமும், இருவருக்கு இராசவாசல் முகாந்திரபட்டமும், நால்வருக்குக் ஹேறாலை மகாத்மையா பட்டமும் சன்மானிக்கப்பட்டுள்ளன. பட்டங்கள்பெற்ற தமிழ்ப்பிரமுகர்களின் நாமங்கள் வருமாறு:

எம். பி. ஈ. — திரு. ஆர். ஓ. புவல், இராசவாசல் முதலியார் வி. பொன்னம்பலம்.

ஜே. பி. — முகாந்திரம் கே. வி. இரங்கநாதன்.

இராசவாசல் முதலியார் — முதலியார் சி. தியாகராஜா.

முதலியார் — முகாந்திரம் ஜே. எஸ். ஆம்ஸ்றோங்.
முகாந்திரம் பி. ரி. சம்பந்தர்.

முகாந்திரம் — திரு. வி. மகேசன்
,, சி. முத்துக் குமாரு.
,, ரி. தியாகராஜா.

நல்லூர் மீசாம்

மானிப்பாய்

## அர்ச். அந்தோனியார் திருநாள்



ஆனிமாசம் 13-ந் திகதி
நோவனைகள் ஆரம்பமாகும்.
ஆனிமாசம் 21-ந் திகதி சனிக்கிழமை
மாலை 8 மணிக்கு
மேற்றிராணியாண்டவர் அவர்கள்
வேஸ்பர் பாடுவார்கள்.
ஆனிமாசம் 22-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை
காலை 7-15 மணிக்குப்
பாடற்பூசையும், சுற்றுப்பிரகாரமும்.

இப்பதியில் இத்திருநாள் கொண்டாடப்படுவது இது ஆறும் வருடமாகும். சென்ற ஐந்துவருடங்களிலும் அருகாமையிலுள்ள நாவாந்துறை, ஆனைக்கோட்டை, நவாலிக்கிறீஸ்தவர்கள் மாத்திரமல்ல, யாழ்ப்பாணப்பகுதியிலிருந்தும், இளவாலை, மாதகல், சில்லாலை மீசாங்களிலிருந்தும். இன்னும்தூரமான இடங்களிலிருந்தும் நல்லூர்மீசாம் நண்பரும், அர்ச். அந்தோனியாரின் பக்தருமே வந்துகூடி எமக்குத் தென்புஅளித்தார்கள். சென்ற வருடங்களிலும்பார்க்க இவ்வருடம் கூடியபக்தர்கள் திருநாளின் போது சமூகமாவார்களென எதிர்பார்க்கின்றேம்.

Fr. J. A. Rajanayagam, O.M.I.
St. Francis Xavier's Church,
Nallur, Jaffna.

### மீண்டும் சபாநாயகர்

புதியபாராளுமன்றப் பிரதிநிதிகள் சபையின் சபாநாயகராக நாத்தாண்டியாப் பிரதிநிதியான திரு. அல்பேட் எவ். பீரிஸ்அவர்கள் சென்றதிங்கட் கிழமை நடந்தேறிய முதலாவதுசபைக் கூட்டத்தில் ஏகமனதாக மீளவும் தெரிவுசெய்யப் பெற்றிருக்கின்றூர். புத்தளப் பிரதிநிதியான ஜனுப் எச். எஸ். இஸ்மாயில் அவர்கள் உபசபாநாயகராகவும், கம்மிற்றிகளின் தலைவராகவும், கம்பளைப் பிரதிநிதியான திரு. எம். டபிள்யு. ஆர். டி சில்வா அவர்கள் கம்மிற்றிகளின் உபதலைவராகவும் தெரிவுசெய்யப்பெற்றூர்கள். அன்று தானே எதிர்க்கட்சிகள் ஒன்றுகூடித் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக அவர்களை எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவுசெய்யலாயின.

### எண்ணுயிரம் டக்றர்மார்

இலங்கையிலே சுகாதாரசேவைகளைச் சிறந்தவகையிலே சித்திகரமாக நடத்துகிறதானுல் 3,249 டக்றர்மார் இன்னும் அதிகமாகத் தேவைப்படுகின்றனரென்றும், இலங்கையிலுள்ள சுமார் 80 லட்சம் சனங்களுக்கும் 4,000 டக்றர்மார் தேவையென்ற வைத்தியபகுதியின் இலக்கையடைய 25 வருடங்கள் செல்லுமென்றும், தற்போதுள்ள டக்றர்மார் 751 பேரேயென்றும் அறிவிக்கப்படுகிறது. ஒவ்வோர் 2,000 நோயாளருக்கும் ஒருடக்றர் வீதம் இருக்கவேண்டுமென்பதே வைத்தியபகுதியின் நோக்கமாகும். சனத்தொகை வீதப்படி பார்க்குமிடத்து தற்போது 7,000 பேருக்கு ஒருவர்வீதமே டக்றர்மார் இருந்துவருகிறூர்கள். இப்போது வைத்தியகல்லூரி வருடம்ஒன்றுக்குத் 90 டக்றர்மாரையே உதவிக்கொண்டிருக்கிறது.

### நேர்த்தியின் பூர்த்தி

கொச்சிக்கடை அர்ச். அந்தோனியாரை வேண்டிக்கொண்டதினுல் முயற்சியின்றி இருந்த எனக்கு ஒருமாதகாலத்துக்குள் வேலைகிடைத்தது. அதன் நேர்த்தியாக வாக்குப்பண்ணியபடி அவருடைய அற்புதத்தைப் பத்திரிகைமூலம் பிரசித்தப்படுத்துகிறேன்.

பி. மனுவேற்பிள்ளை
நவாலி தெற்கு மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்துக்குப்பின்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

குருவானவர் வருகிறவரையில் அவர் உயிருடன் இருக்கமாட்டார். அவருடையஆத்துமத்தைக் கடவுள்முன் செல்லத் தயாரிக்கவேண்டும். நீ என்னசெய்வாய்?"

"இவர் கிறீஸ்தவரோ அல்லது வேறுயாரோ தெரியவில்லை. யாராய் இருந்தாலென்ன? அவரைச் சாவுக்குத் தயாரிக்கலாம்" எனச் சிறுவன் அந்தோனி கூறிக்கொண்டே குனிந்து, காயம்பட்டவனது செவியருகில் வாயைவைத்துச் சத்தமாகப் பேசத் தொடங்கினான்: "ஓ, என் சர்வேசுரா! நீர்இருக்கிறீர்என நான் விசுவசிக்கிறேன். ஓ, என்சர்வேசுரா! நான் உம்மில் நம்பிக்கைவைக்கிறேன். ஓ, என்கடவுளே! நான்உம்மை நேசிக்கிறேன். ஓ, என்சர்வேசுரா! நான் உம்மைமனம்நோகப் பண்ணியதற்காக மிகவிசனிக்கிறேன்." பிறகு அவன் பரமண்டலமந்திரத்தையும், விசுவாசமந்திரத்தையும் சத்தமாய்ச்சொல்லி, இறுதியாகத் "திரு இருதயத்தின் சிநேகிதராகிய அர்ச். சூசையப்பரே, இவனுக்காக வேண்டிக்கொள்ளும்" என்றான்.

காயம்பட்டுக்கிடந்தவன் கண்களைத் திறந்து சுற்றிலும்பார்த்து, "நான் செத்துப்போவேன்என நினைக்கிறேன்" என்றான். சிறுவன்அந்தோனி அவனுடையதலையை மெதுவாகஉயர்த்தினான். காயம்பட்டவன் திரும்பவும் கண்களைமூடினதும் அந்தோனிக்குப் பயம்உண்டாயிற்று, எங்கே அவன் செத்துப்போவானோஎன்று. ஞானோபதேசபாடத்தில் கேட்டதையே திரும்பவும் சொல்லத்தொடங்கினான். "ஓ, என்சர்வேசுரா, நான்உம்மை விசுவசிக்கிறேன். ஓ, என்சர்வேசுரா, உம்மை நம்புகிறேன். ஓ, என்சர்வேசுரா..."

காயம்பட்டவன் தன் கண்களைத் திறக்காமலே, "ஓ, என்சர்வேசுரா" என்றான். "உம்மை நான் நேசிக்கிறேன்" என அந்தோனிசொன்னதும் "உம்மை நான் நேசிக்கிறேன்" என அவனும்கூறினான்.

"ஓ, என்சர்வேசுரா, உம்மைமனம் நோகப் பண்ணியதற்காக"

"ஓ, என்சர்வேசுரா, உம்மைமனம் நோகப் பண்ணியதற்காக"

"என்முழுமனதுடன் துக்கிக்கிறேன்"

"என்முழுமனதுடன் துக்கிக்கிறேன்" எனப் பலவீனமானகுரலில் அவன் மொழிந்தான்.

"என்யேசுவே, இரக்கமாயிரும்."

"என்யேசு...வே, இரக்க...மாயிரும்" என அவன் மிகவும்மெதுவாகக் கூறினான். முகம்வெளுத்தது. அந்தோனியின்கன்னங்களில் நீர்வடிந்தது. எனினும் தொடர்ந்து "அர்ச். சூசையப்பரே" என்றான்.

காயம்பட்டவனின் கண்கள் திறந்தன. சற்றேசத்தமாய்ப் பதில்சொன்னான். "அர்ச். சூசையப்பரே, எனக்காக வேண்டிக்கொள்ளும்" என்று திரும்பச்சொல்லித் தலைசாய்த்துவிட்டான்.

அவனுடையஆத்துமம் உயரப் பறந்துபோய்விட்டது. இப்பொழுது அந்தோனி பயப்படவில்லை. தன் தாய் அன்றுகாலைகொடுத்த புதிய கைக்குட்டையை எடுத்து, இறந்தவனுடைய முகத்தைமூடி, அருகில் முழந்தாளிட்டுத் தனக்குத்தெரிந்த செபங்களையெல்லாம் திரும்பத்திரும்பச் சொன்னான்.

சற்றுவேளையுள் இருகார்கள் வந்தன. ஒருகாரில் அந்தோனியின்நண்பர்வந்தார். இன்னொருபெரியகாரில் பங்குச்சுவாமியாரும், டக்றரும், இறந்தவனின்நண்பரான ஜிம் மாட்டீனும் இருந்தார்கள். கீழேகிடந்தவனை டக்றர் சோதித்துப்பார்த்து, எல்லாம் முடிந்தது என்றார். குருவானவர் உடனே நிபந்தனையுடன் அவனுக்குப் பாவப்பொறுத்தல் ஆசீர்வாதமும், அவஸ்தைப்பூசுதலும் கொடுத்தார்.

சிறுவன் அந்தோனியிடம் பலகேள்விகள் கேட்டனர். "அவன் திரும்ப வாய்திறந்து பேசினானா?" என்றார்கள். "ஆம், என்னுடன்சேர்ந்து செபங்களைச்சொன்னார்." "என்ன செபங்கள்?" எனக் குருவானவர்வினவினார். "மோட்டர்விபத்தில் அகப்பட்டு யாராவது சாகக்கிடந்தால் சொல்லவேண்டுமென்று ஹெலன்ரீச்சர் கற்பித்தவைகளையெல்லாம் சொன்னேன்" எனச் சிறுவன்மொழிந்தான்.

நடந்தயாவற்றையும் குருவானவர் சிறுவனிடமிருந்து பல கேள்விகள் மூலம் அறிந்தார். "கடவுள் துதிக்கப்படுவாராக" என்றுசொல்லிச் சிறுவனைத் தட்டிக்கொடுத்து, "தன்மகனுக்காக ஒருதாய் காத்துக்கொண்டிருக்கிறாள். அவன் ஒருபோதும் உயிருடன் இனித் திரும்பமாட்டான். ஆனால், அவளுக்கு நீசெய்தது பெரும் ஆறுதலாயிருக்கும்" எனக் குருவானவர்கூறினார்.

---

## நாளசங்கதிகள்

— இளம்பிள்ளைவாதம் வராமல் தடுக்குமாறு குழந்தைகளுக்கு ஊசிமூலம்ஏற்றப்படும்மருந்து இன்னும் இருவருடகாலத்தில் பெருந்தொகையாக உற்பத்தி செய்யப்படுமென்று தாம்நம்புவதாக மெல்போண்நகரிலே வால்டர் அண்ட் எலிசா நிலைய தலைவரான சேர் எம். பர்னெட்கூறுகின்றார்.

—யப்பானிய கம்யூனிஸ்தகட்சியின் பிரபலஅங்கத்தவரும், யப்பானிய பாராளுமன்ற அங்கத்தவருமான திரு. இன்சொக்கு நாகன்சி என்பவர் சென்ற 1-ந்திகதியன்று கம்யூனிஸ்த கட்சியிலிருந்து இராசினாமாச் செய்யலாயினர். அங்கு கம்யூனிஸ்த கட்சியினர் தங்கள் கொள்கையிலே பலாத்காரத்தை உபயோகிப்பதை ஆட்சேபித்தே தாம் இராசினாமாச் செய்ததாக அவர் தெரிவித்திருக்கின்றார்.

—சென்ற 1951-ம்ஆண்டு எடுக்கப்பட்ட குடிசனமதிப்பின்படி இந்தியாவின் சனத்தொகை 35 கோடியே 68 லட்சம் போகும். கடந்த பத்துவருடங்களிலும் இந்தியசனத்தொகை 12·5 சதவிகிதம் அதிகரித்துள்ளது. அங்கே இப்போது ஆண்களைவிடச் சுமார் ஒருகோடிபெண்கள் அதிகமாயிருக்கின்றார்கள்.

—கத்தோலிக்க திருச்சபைக்கு வத்திக்கானைப்போன்று புத்தசமயத்துக்கும் தலைமைஸ்தானமாக ஓர் "வத்திக்கா"னை நிர்மாணிக்கத் தாய்லாந்துஎன அறியப்படும் சியநாடு திட்டமிட்டுவருகின்றது. அங்கு சாரபுரியிலே புத்தரின் அடிச்சுவட்டுக் கோவிலைச்சூழவர உலகபுத்தசமய தலைநகர் ஒன்றை அமைக்கவேண்டுமென்ற திட்டத்துக்குச் சியஅரசாங்கமும் அங்கீகாரம் அளித்துள்ளது.

—கம்யூனிஸ்த கொடுங்கோலாட்சி நடக்கின்ற ஹங்கேரியிலே அப்போது இரண்டுகோடி பிரதிகளுடன் கூடிய இருகத்தோலிக்க தினசரிப்பத்திரிகைகளும், 20 வாரப்பத்திரிகைகளும், மற்றும் 30 மாதப்பத்திரிகைகளும் வெளிவந்தவிடத்திலே தற்போது நான்குகத்தோலிக்க பத்திரிகைகளே பிரசுரமாகின்றன; இவைகளும் கம்யூனிஸ்த அரசாங்கத்தைப் பிரியப்படுத்தியே வெளிவரவேண்டியிருப்பதாக வத்திக்கான் தினவர்த்தமானி எழுதியிருக்கின்றது.

---

## புதியபாராளுமன்ற அங்கத்தவர்கள்

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

2. ,, சி. வன்னியசிங்கம்—கோப்பாய்.

### கம்யூனிஸ்த-ல-ச-ச-கட்சி

1. திரு. பீற்றர் கெனமன்—கொழும்பு நகர்மத்தி, 1-வது அங்கத்தவர்.
2. திருமதி. குஸுமா குணவர்த்தன—அவிசாவெலை.
3. திருமதி. டொறீன் விக்கிரமசிங்க—அக்குறெசை.

### தொழிற்கட்சி

1. திரு. ஆர். ஈ. ஜயதிலக—நாவலப்பிட்டி.

### குடியரசுக்கட்சி

1. திரு. வில்மட் ஏ. பெறேரா—மத்துகமம்.

### அரசாங்க பாராளுமன்ற கட்சியில் சேர்ந்துகொண்ட சுயேச்சைவாதிகள்

1. சேர் றசிக் பரீத்—கொழும்பு நகர்மத்தி,–3-வதுஅங்கத்தவர்
2. திரு. சி. சிற்றம்பலம்—மன்னார்
3. ,, ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல—தண்டகமுவா.

---

## தேர்தலும் பூசலும்

(டானியேல் ரேச்)

இவ்வாண்டிலே நமது இலங்கை அரசியல் மின்னல்வேகத்தில் பலகாரியங்களைச் சாதித்துக்கொண்டே போவதைக்காண்கிறோம். கொழும்புக்காட்சியில் திடீர், திடீரென்ற மாற்றம். மாஜி பிரதமரின் திடீர்மரணம். புதியபிரதமர்—அதுவும் உலகில்காணற்கரிய பிரமச்சாரிப் பிரதமரின் திடீர்த்தோற்றம். எதிர்பாராதவிதமாகப் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. தேர்தல் மிகத்தீவிரமாக நடத்தப்பட்டது. ஐ. தே. கட்சி அமோகவெற்றிபெற்றுவிட்டது. இவைகளெல்லாம்1952-ம்ஆண்டின் ஓர்பகுதி அதிசயங்கள். இன்னும் மீதியாயிருக்கும் ஏழுமாதங்களிலும் இன்னும்பல அதிசயங்களை நாம் எதிர்பார்க்கலாம். ஆனால், இளம்பிரதமர் தலைமையில் இலங்கை அரசாங்கம் எதிர்பாராத வெற்றிகளை அடைந்துகொண்டது முன்னேற்றத்தின் ஆரம்பஅறிகுறியேயாகும்.

சென்ற ஓர்மாதத்தில் இலங்கைமக்கள் பலபிரிவுகளாகப் பிரிந்துநின்று போட்டியில்குறித்த ஒவ்வோர் அபேட்சகரையும் வாக்குவாதங்கள், பிரசங்கங்கள், பிரசுரங்கள் மூலமாகவும், தெருக்களிலும், சுவர்களிலும் தீட்டிய சித்திரங்கள், சுலோகங்கள்மூலமாகவும் பலமாகஆதரித்து எதிர்பாராத விதமான வெற்றிகளும், ஏமாற்றங்களும் அடைந்து தேர்தலையும் முடித்துவிட்டார்கள்.

தேர்தலில் இப்படியானசம்பவங்கள் நிகழ்வது சர்வசாதாரணமென்றாலும் வாய்ச்சண்டையும், கைச்சண்டையும், மனக்குரோதங்களும் நல்லறிவுள்ளவர்களிடையே ஏற்படக்கூடியனவன்று. இதேநிலைமைகளை அடுத்த தேர்தல் மட்டும் மனதில்வைத்துச் சாதிப்பதும் சனநாயகத்தின் இலட்சணமல்ல. மனுநீதியின் தர்மமுமல்ல. நாட்டின்நலனுக்கோ, ஒவ்வொருவரினதும் தனி நலனுக்கோ உகந்ததுமல்ல. ஆதலால், இனிமேல் நமதுமக்கள் செய்யவேண்டியது என்ன? என்பதையே சற்றுச் சிந்திக்கவேண்டும்.

நாமெல்லாம் இந்நாட்டுமக்கள்
நாமெல்லாம் இந்நாட்டு மன்னர்கள்

மக்களாகவும், மன்னர்களாகவும் நம்மைவைத்திருப்பது சனநாயக அரசாங்கமே. இச்சனநாயக அரசாங்கத்திடமே இலங்கைஅரசியல் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. சிலர் புரட்சிகரமான மாற்றத்தையும், புரட்சிகரமான அரசாங்கத்தையும் எதிர்பார்க்கின்றனர். ஆனால், அவர்கள்எதிர்பார்க்கும் வாய்வீச்சுக்காரரின்செயல் தெருக்குறளிவித்தைக்காரனின் வாய்ப்பந்தலன்றிச் செயல் கண்கட்டிவித்தையாகவே இருக்கும். ஆதலால், மண்ணைப் பொன்னாக்குவோம், மலையைத் துகளாக்குவோம், கடலைப் பாலாக்குவோம் என்பதெல்லாம் தெருக்கூத்தாடியின் வெறும்பேச்சன்றிக் காரியஅனுகூலமாகமாட்டாது. ஆனால், சனநாயக அரசாங்கத்தில்மாத்திரம் கூடுதலான நலன்களை நாம் பெறமுடியும்.

தங்கள் தைரியத்தைநம்பி மனப்பால்குடித்திருந்த அபேட்சகர்கள்தேர்தல்காலத்தில் படாதபாடுகள் பட்டதையும், பலபேர் ஒதுக்கித்தள்ளப்பட்டதையும் கண்டதோடு, திரும்பவும் ஐந்துவருடங்களின்பின் நமதுதயவையிரந்து மண்டியிட்டு நிற்கவேண்டிய நிலைமைஉண்டென்ற எண்ணமும் அவர்களை ஆட்டிவைக்குமல்லவா? ஆனால், ஒவ்வோர் தேர்தல்தொகுதிகளிலும் வென்றகட்சியின் ஆதரவாளர் ஒவ்வொருவரும் தாங்கள்தான் வெற்றிக்குக் காரணமென்று மார்தட்டிக் கொக்கரித்து மனப்பூரிப்படைவதும், தோற்றகட்சியினரை அவதூறுபேசுவதும், அவமானப்படுத்துவதும், தோல்வியடைந்தோர் தங்கள் பணமும், பிரயாசையும், மானமும் வீணாகிவிட்டனவேயென்ற மனஈறலில ஆவேசங்கொண்டு அதர்மமுறைகளில் இறங்குவதும் அருவருக்கத்தக்க காரியங்களாகும்.

தேர்தலிலே பலர்போட்டியிடுவது வழக்கம். அதில்எல்லோரும் வெற்றிபெறமுடியாது. யாரோஒருவர் வெற்றிபெறுவது நிச்சயம். ஒவ்வொருவரும் தத்தமக்கே வெற்றியென்ற மனக்கருத்தோடு வெற்றியைநோக்கி உழைப்பது வழக்கம். இந்தவேளை "ஒன்றைநினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்" என்பதைமறந்து பெரியவாதுகளெல்லாம் செய்வது விரும்பத்தக்க செயலாகாது.

தங்களுக்குத்தெரிந்த நியாயங்களைக்கொண்டு தங்களுக்கிஷ்டமான அபேட்சகரை ஆதரிப்பதும், தங்கள்கட்சியின் வெற்றிக்காகஉழைப்பதும், முடிவைக் கண்டவுடன் வெற்றிபெற்றவர் வாக்காளர்சகலரையும் தம்மவரென எண்ணுவதும், வாக்காளர்களும் தங்கள் போட்டிகளைமறந்து தங்களுள் சமாதானமாக ஒன்றுசேர்ந்து வெற்றிபெற்ற ஆதரவாளரின் தலைவர்களும், தோல்வியுற்ற ஆதரவாளரின் தலைவர்களும் ஒன்றுசேர்ந்து பிரதிநிதியைக் கண்ணியப்படுத்துவதுந்தான் நாம் செய்யவேண்டிய நேரியகடனாகும்.

இத்தகைய செயலினாற்தான் சனநாயகத்தின் விசேஷதத்துவத்தை நாம்அனுபவிக்கும் நிலைமையை அடைபவர்களாவோம். இப்படியான ஒன்றுபட்ட அமைதியினால் நமது கிராமங்களும், நமது நாடும் பெருமையடையும். இதனால்தான் நாம் ஒவ்வொருவரும் வாக்குரிமைக்கு உரித்தாளரென்று காட்டமுடியும். இவ்வித அமைதியையும், ஒற்றுமையையும் நிலைநாட்டுபவர்களே சிறந்தவெற்றிவீரர்களாக அறிவுள்ளமக்களால் போற்றப்படுவர். சுபம்!

---

—ஸ்பானியதேச பார்சலோனாநகரிலே நடந்தேறியிருக்கும் சர்வதேசசற்பிரசாத மகாநாட்டைக் கௌரவிக்குமுகமாக மொற்றிகா மேற்றிராணியாரது ஆலோசனையின்பேரிலே அத்தேசத்திலுள்ள சிறைக்கைதிகளானசுமார் பதினாயிரம்பேர் ஜெனறல் பிறாங்கோ அவர்களால் மன்னிப்பருளப்பட்டிருக்கின்றார்கள். மற்றும் ஆயிரக்கணக்கான கைதிகளின் நீடியசேவைகாலம் குறைத்துவிடப்பட்டிருக்கிறது. இவர்களில் அரசியற்கைதிகள் அடங்கமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

சகோதரங்களே!

இன்று வியாழக்கிழமை. சற்பிரசாதத் திருநாள் என்பதை நீங்கள் அறிந்திருக்கக் கூடும். ஆனால், உங்களுடைய கோவில்களிலே அடுத்துவரும் ஞாயிறு அன்றுதான் சற்பிரசாதத் திருநாளை வழக்கமாகக் கொண்டாடுகிறீர்கள். சற்பிரசாதத் திருநாள் என்றவுடனே திவ்விய சற்பிரசாத ஆண்டவர் எழுந்தருளும் வீதியெல்லாம் அலங்காரமாய் வர்ணக் கடதாசிகளாலும், குருத்தோலைகளாலும் சோடிப்பீர்கள்; நாலு சந்திகளிலும் நாலுசிறந்த பந்தல்கள் போட்டு அவைகளில் அழகிய பீடங்கள் அமைப்பீர்கள். சாயந்தரம் எல்லோரும் வெள்ளை உடுப்புகள் தரித்து வரிசைவரிசையாகச் செபஞ்செய்து பாட்டுகளைப்பாடி, பயபத்தியாய்ப்பராக்கில்லாமல் சற்பிரசாதநாதரைச் சுற்றுப்பிரகாரமாய்க் கொண்டு செல்லுவீர்கள். வழி வழியே இடைவிடாது தூபங் காட்டுவீர்கள். நறுமணம் வீசும் பூக்களைத் தெளிப்பீர்கள். உங்கள் செபங்கள் அந்தத் தூபத்தைப்போல் சற்பிரசாதநாதரை நோக்கிச் செல்லவேண்டும். உங்கள் இருதயங்களும் நீங்கள் தெளிக்கும் பூக்களைப்போன்ற அழகிய புண்ணியக் கிரிகைகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கவேண்டும். அந்நேரம் நீங்கள் தெளிக்கும் பூக்கள் அவர்முன் விழுமாப்போல் உங்கள் சிறு ஒறுத்தல் முயற்சிகளும் அவர் பாதத்தில் காணிக்கையாக்கப் படவேண்டும். உதாரணமாக, நான் இந்தச் சுற்றுப்பிரகார நேரம் பராக்குப் பாராமல் செபமோ, பிரார்த்தனையோ சொல்லுவேன்; கதையாமல், மற்றவர்களுக்குப் பராக்குக்காட்டாமல் பாக்களைப் பாடுவேன்; சரியாக முழந்தாளிட்டு ஆசீர்வாதம் காண்பேன் என்னபோன்ற ஒறுத்தல்களாம். இவ்விதமாக உங்கள் கோவில்திருநாள் சுற்றுப்பிரகாரத்தில் நடக்கிறதில்லை. அப்போது வெடி, குடை, மேளதாளம், சத்தம், சந்தடி, சோளம்பொரி எறிகிறதும் பொறுக்குகிறதுமாய் இருக்கும். கோவில் திருநாள் சுற்றுப்பிரகாரத்தில் உங்கள்கோவில் சுத்தவாளரின் சுரூபத்தைக் கூட்டில் வைத்து உங்கள்கோவிலாட்களே கூடுஎடுத்துப் பட்டுக்குடைகள் பிடித்து மத்தள வீணை பாட்டுக்கச்சேரியுடன் ஊர்வலஞ் செல்வர். சற்பிரசாதத் திருநாளிலோ ஆண்டவருடைய சுரூபத்தையல்ல, மெய்யான சருவேசுரனும், மெய்யான மனிதனுமாகிய யேசுக்கிறீஸ்து நாதரைக் குருவானவர் கதிர்ப்பாத்திரத்தினுள் எழுந்தேற்றஞ் செய்து வேறுபல குருமார் பூசைவஸ்திரங்கள் அணிந்து புடைசூழப் பூசைப்பரிகாரர்பலர் தூபங்களுடனும், மெழுகுவர்த்தித் தீபங்களுடனும் முன்செல்லச் சுற்றுப்பிரகாரமாய்க் கொண்டுபோகிறார். தம்முடைய திருச் சரீரத்தோடும், இரத்தத்தோடும், ஆத்துமத்தோடும், தேவசுபாவத்தோடும் சற்பிரசாத வெள்ளை வட்டத்திலே அப்பக் குணங்களுள் எழுந்தருளியிருக்கும் யேசுக்கிறீஸ்து நாதரைப் பவனி கொண்டு செல்லுகிறோம். நமது ஆண்டவர் ஒட்டோலகராய் யெருசலேம் நகருக்கு எழுந்தருளின போது அந்நகர் வாசிகளும், பிள்ளைகளும் "தேவ நாமத்தினால் வருபவருக்கு ஓசன்னா! தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! என்று பாடினார்கள். அந்த ஆண்டவர்தாமே உங்கள் வீதிகள்வழியாய்உங்கள் ஊரினூடாய்ச் செல்லும்போது "எங்கள் ஆண்டவருக்கு ஜே! எங்கள் ஆண்டவரும், எங்கள் இராசாவுமான அவருக்கே ஜெயம்" என வரவேற்றுப் புகழ்பாடுங்கள்.

லூயிஸ் அ. பிள்ளை.

## அற்புத வரத்தீர்! அடைக்கலம் அருள்வீர்

(1) செங்கரத் தேதிருப் பாலனும்மைத்
தேடி வரும்பேறு கூடிநின்ற
மங்களக் கோடியற் புதவரத்தீர்!
மாதயை செய்தெயை யாதரிப்பீர்.

(2) ஆபத்து வேளையில் உதவி செய்யும்
அந்தோனி யாரே! நம் அற்புதரே!
தாபத்தோ டுய்பத நிழலடைந்த
தாசருக் கடைக்கலந் தருகுவீரே.

(3) கருணையங் கடலருள் போற்றி நின்றீர்
காற்றொடு கடல்வலி மாற்றிநின்றீர்!
ஒருவருங் காணாமல் ஒளித்த தெல்லாம்
உண்மையாய் அளித்தருள் மிகுத்துநின்றீர்!

(4) பஞ்சத்தைப் பிணியினைப் போக்கிநின்றீர்
பலபல புதுமைக ளாக்கிநின்றீர்
நஞ்சத்தை யமுதென மாற்றிநின்றீர்
நமக்கருள் செய்திட வல்லையோதான்?

(5) ஆண்டவ னருளினால் அவனிதன்னில்
அந்திம வேளையை முன்னறிந்தீர்
ஈண்டெமக் கும்மருள் தந்துகாப்பீர்!
இரக்கமோ டுமதரு ளிதயஞ்சேர்ப்பீர்!

— "ஞானம்"

## தாய் தந்தை சொல்லைத் தட்டாதே

அன்றுமாலை 8 மணியாயிற்று. ஆயினும் வீட்டுக்குத் திரும்பாமல் தனது தோழருடன் விளையாட்டு மைதானத்தில் ஊர்க்கதை பேசிக்கொண்டு இருந்தான் ரமணி. அவனை மரியாள் தேடிவருவதைக் கவனித்து, அவன் பக்கத்தில் இருந்தவன் ஒரு கிள்ளுடன் அவள் வரவை அவனுக்குத் தெரிவித்தான். நெடுநேரம்ஆகியும் வீட்டுக்குச் செல்லாததை உணர்ந்து, அங்குசென்றால் தகப்பன் கடிந்துகொள்வார்என எண்ணி அவ்விடத்தைவிட்டு இரகசியமாய் நகர்ந்து தன்சிநேகிதன் வீட்டுக்குச் சென்றான் ரமணி. அங்கு தன் சிநேகிதன் பாலனையும் அழைத்துக்கொண்டு அடுத்தஊருக்கு நடைகட்டினான்.

அவ்வேளை இரவாய் இருந்தபடியால் மேலும் செல்லவியலாது முதலில் அகப்பட்ட ஒரு சத்திரத்தில் இருவரும் தங்கினர். மறுநாள், தங்களைத்தேடி யாரும் வரக் கூடுமென எண்ணி ஊர்விட்டு ஊர்சென்றனர். நடுப்பகல் ஆனதும் அவர்களுக்கு ஆயாசம் மேலிட்டது. ஆயாசம்தீர்த்துக் கொள்ளும் நோக்கமாகத் தண்ணீர் தேடியலைந்து ஈற்றில் ஓர் தவறணையை அடைந்தனர்.

பாலன், ரமணியைநோக்கி, "நண்ப! என்னால் இதற்குமேல் ஒரு அடியும் எடுத்துவைக்க முடியாது; தண்ணீர் இல்லாவிடினும் கள்ளையாவது குடித்துத் தாகத்தைத் தீர்ப்போம் என்றான். அதற்கு ரமணியும் இசையவே, கள்ளைக் குடித்தனர். அப்போது ரமணி தன் தாய்க்குக் கொடுத்த இரண்டாவது வாக்கை மீறினான். தாகந்தீரக் குடிக்கத் தொடங்கிய இருவரும் ஈற்றில் தங்கள்பணம் முழுவதையும் கொடுத்து ஆசைதீரக் குடித்தனர்.

அதனால் பணம்எல்லாம் செலவாகிச் சுயஉணர்வு இழந்து, நடைதளர்ந்து தள்ளாடித் தள்ளாடி நடந்து அப்பால் சென்றனர். இரு நடைப்பிணங்களும் கைகோத்த படியே இழுபறிப்பட்டு ஒருமரத்துடன் மோதி அப்படியே வெறிமயக்கால் விழுந்து கிடந்தனர்.

தங்கள் வெறிமுறிந்தபின் உணர்ச்சி பெற்று எழுந்து வேறிடஞ் செல்லப் பணமின்றி இருந்தனர். கடைசியாக ஒரு புகையிரத ஸ்தானத்துக்குச் சென்று பிரயாணச்சீட்டு இன்றியே களவாகப் புகைரதத்தில் ஏறச் சித்தம் செய்து ஏறிக்கொண்டனர். அப்பொழுது ரமணி தனது தாயாருக்குக் கொடுத்த மூன்றாவது வாக்கையும் மீறினான்.

புகைரதம் கடகடென்று ஒருமணி நேரத்துள் பல ஸ்தானங்களைக் கடந்து சென்றது. அத்துடன் இவர்கள் நெஞ்சமும் படபடென்று இடிக்கத்தொடங்கியது. இதற்குக் காரணம், பிரயாணச் சீட்டுப்பரிசோதகரே. திடீரென ஏதோ யோசித்த வண்ணம் ரமணி ஒருபெட்டியில் இருந்து மறுபெட்டிக்கு மாறினான். அந்தோ! தவறித் தரையில் விழுந்து மூர்ச்சித்தான். புகைரதம் நிற்பாட்டப் பட்டு, அவன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டான்.

இதைப் பத்திரிகை வாயிலாக மகனைப் பிரிந்த தாய்தந்தையர் அறிந்து அங்கு சென்றனர். ரமணியும் தனது கண்ணைத் திறந்து தனது தாய்க்குக் கொடுத்த வாக்கைமீறியதால் ஏற்பட்ட வாதைகளை அறிந்து, அவற்றிற்குப் பிராயச்சித்தம் பண்ணினான்.

சகோதரரே, சகோதரிகளே! மரியாள் ரமணியிடம் கேட்டுக் கொண்ட மூன்று உறுதிவாக்குகள் என்ன?

1. மாலை ஆறுமணிக்குமேல் வெளியில் அவசியமின்றித் திரியக் கூடாது.
2. மதுபானத்தை அறவே நீக்கு.
3. பொய், களவை விலக்கு என்பனவே.

நாங்களும் இவைகளைக் கவனித்து நடக்க மனம் கொள்வோமாக.

அ. பார்பரா

## உங்களுக்குத் தெரியுமா?

**1.** புதியபாராளுமன்றப் பிரதிநிதிகள்எல்லாரிலும் அதிகம்உயரமானவர் யார்?

சப்பிரகாமு மாகாணத்தைச்சேர்ந்த நிவித்திகலைப் பிரதிநிதியான திரு. ஹறல்ட் வெரகம அவர்களே. இவர் 6 அடி 3 அங்குலத்துக்குமேல் உயரமுடையவராம்.

**2.** திருச்சபைக் கருதினால்மாரின் தொகை ஏன் எழுபதாக விதிக்கப்பட்டுள்ளது?

இசிறவேலரை ஆட்சிசெய்யத் தமக்குத்துணையாய் ஞானமுள்ள 70 மனிதரை மோசேஸ்முனிவர் கொண்டிருந்ததன் ஞாபகார்த்தமாகவே ஐந்தாவது சிக்ஸ்துஸ்பாப்பானவர் கருதினால்மாரின் தொகையையும் எழுபதாக விதிக்கலாயினர்.

**3.** இம்முறைத்தேர்தலிலே முற்றுகத் தோல்வியுற்ற அரசியற்கட்சி எது?

புத்தகுடியரசுக் கட்சி. இது மூன்று அபேட்சகர்களையே தேர்தலுக்குநிறுத்தியிருந்தும் மூவரும் தோல்வியடைந்தனர்.

**4.** பிரதமர் டட்லி சேனநாயக அவர்கள் பாதுகாப்பு – உள்நாட்டுக் கருமாதிகாரமந்திரியார் என்றமட்டிலே அவரது அதிகாரத்தில்அடங்கிய அரசாங்கபகுதிகள் எவை?

(1) பாதுகாப்புப்பகுதி.
(2) உள்நாட்டுக் கருமாதிகாரபகுதி.
(3) வெளிநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின்பகுதி.
(4) குடியேற்ற – வெளியேற்றப்பகுதி.
(5) பொலிஸ்பகுதி.
(6) இந்திய, பாகிஸ்தானிய வாசிகளைப் பதிவுசெய்தற்கானபகுதி என்பனவே.

**5.** சென்ற பொதுத்தேர்தலிலே அபேட்சகர்கள் தங்கள்சின்னங்களாக எவற்றைஅதிகமாகத் தெரிந்துகொண்டார்கள்?

ஆனை, நட்சத்திரம், கை, குடை, திறப்பு, வீடுஆதியவைகளையே அதிகமாகத் தெரிந்துகொண்டார்கள். 65 அபேட்சகர்கள் யானையையும், 61 அபேட்சகர்கள் நட்சத்திரத்தையும், 46 பேர் கையையும், 32 பேர் குடையையும், 29 பேர் திறப்பையும், 10 பேர் வண்டிச்சில்லையும், 10 பேர் வீட்டையும், 7 பேர் சைக்கிலையும், 3 பேர் கண்ணையும், 3 பேர் பட்சியையும், 2 பேர் மூக்குக்கண்ணாடியையும், ஒருவர் கடிகாரத்தையும், ஒருவர் அன்னதாழையையும், ஒருவர் புஷ்பத்தையும் தெரிந்துகொண்டார்கள்.

**6.** கரையிலிருந்து எத்தனைமைல் தூரத்திற்குட்பட்டகடல் ஓர்தேசத்தின் ஆட்சிக்குட்பட்டது?

ஒருதேசத்தின் கரையிலிருந்து மூன்றுமைல்தூரத்திற் குட்பட்ட கடலே அத்தேசத்தின் ஆட்சிக்குட்பட்டது. அதற்குஅப்பாலுள்ளகடல் எல்லாத்தேசங்களுக்கும் பொதுவானது. அது மேல்கடல்என அழைக்கப்படும்.

**7.** யுத்தத்தில் பாவிக்கப்படும் நச்சுப்புகைகள் எவை?

(1) கண்ணீர்ப்புகை. (2) மூக்கெரிவை உண்டுபண்ணும்புகை. (3) சுவாசப்பையில் எரிவைஉண்டாக்கும்புகை. (4) கொப்புளம் உண்டுபண்ணும்புகை. (5) கொப்புளங்களையும், எரிவையும்உண்டுபண்ணும் கடுகுபுகை. (6) லூயிசைற்புகை. இது கடுகுபுகைபோல் கொடியது.

**8.** வால்வெள்ளிஎன்பது என்ன?

வாலுள்ள பெரியஎரிவெள்ளியாகும். வானவீதியிலே 1 லட்சத்து 20ஆயிரம் வால்வெள்ளிகள்வரையில் உள்ளனவென்று சொல்லப்படுகிறது. வால்வெள்ளிகளின்வால் கோடிக்கணக்கான மைல் நீளமுள்ளது. சிலஆண்டுகள் முதல் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு ஒருமுறை வால்வெள்ளிகள் தோற்றுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## அமெரிக்க கமக்காரர்

— வாஷிங்ரன்

சர்வதேச சௌசன்யத்தை வளர்க்கும்துறையில் இன்னொரு முன்னேற்றம். 90 அமெரிக்க வாலிபகமக்காரர் இந்தக்கோடைவிடுமுறையை மத்திய கிழக்குப் பிரதேசத்திலும், ஐரோப்பாவிலும் கழிக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். இது சாதாரணமாகச் சொல்லப்படுகின்ற உல்லாசப் பிரயாணத்திலும் உயர்வானது. அதாவது இவர்கள்எல்லாரும் முன்சொன்ன வெளிநாடுகளில் உள்ள கமப்பண்ணைகளில் வேலைசெய்து தங்கள் கோடைவிடுமுறையைக் கழிப்பர். இந்தமாதிரி ஏற்பாட்டை முறைப்படி நடத்துவது சர்வதேச வாலிபகமக்காரரின் மாற்றுத்திட்ட நிர்வாகிகளே. இதன்படி, அமெரிக்கவாலிபர் வெளிநாட்டுப் பண்ணைகளில் அறிவு, அனுபவ வளர்ச்சிபெறுவர். இதேதிட்டப்படி 22 வெளிநாடுகளிலிருந்து 75 வாலிப கமக்காரர் அமெரிக்காவுக்குவந்து, இங்குள்ளபண்ணைகளில் வேலைசெய்து திரும்புவார்கள்.

## ஆக்கவேலைக்கு அணுச்சக்தி

— வாஷிங்ரன்

அணுச்சக்திக்கம்மிஷன் தயாரித்துத்தருகிற "ஐசோடோப்" களைக் கொண்டு அமெரிக்காவிலுள்ள 600 பல்கலைக்கழகங்களும், வைத்திய சாலைகளும், ஆராய்ச்சிக்கூடங்களும் ஆக்க வேலைகளுக்கு அணுச்சக்தியை மேலும்மேலும்பயன்படுத்த வழிவகைகளை ஆராய்ந்துகொண்டிருக்கின்றன. ஐசோடோப்உதவுதல் சென்ற ஐந்து வருடமாக நடந்துவருகிறது. குறிப்பாக இது வைத்தியஆராய்ச்சிக்குப் பெரிதும்பயன்பட்டுள்ளது. நோயின் தன்மையையும், அதற்குச்சிகிச்சை செய்யும் பக்குவத்தையும் கண்டறியும் துறையில் இதன்உதவி குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. வேளாண்மை விருத்தி, தொழிலியல்வளர்ச்சி, உடற்கூறுஆராய்ச்சி ஆதியதுறைகளிலும் ஐசோடோப் வெகு உபயோகமாக இருக்கிறது.

## சுதந்திரஉலக பலம்

— டெட்ரோயிட்

சுதந்திரஉலக கூட்டுப்பாதுகாப்பை இன்னமுமே முழுவதும் நிலைநிறுத்திப் பூர்த்திசெய்யாதிருப்பினும், அதன் வல்லமையைச் சோவியற்ருஷியா உணர்கிறது. அதுவிரும்பியது பிளவுபட்ட சுதந்திரஉலகை. ஆனால், கம்யூனிஸ்தர்களின் அந்த எண்ணத்தை நிறைவேறவொட்டாமல் சுதந்திரஉலகம் செய்துவருகிறது. இவ்வாறு பரஸ்பர பாதுகாப்புத்திட்ட நிர்வாகியான திரு. ஏவ்ரெல் ஹரிமன் அவர்கள் இங்கு அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறார்.

## வர்த்தகப் பொருட்காட்சி

— வாஷிங்ரன்

அமெரிக்காவில் வருடாவருடம் கொண்டாடப்படும் உலக வர்த்தக வாரத்தையொட்டிய பொருட்காட்சியில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் நாடுகளின் வியாபாரச்சாமான்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இங்குள்ள இலங்கை ஸ்தானீகராலயத்தைச் சேர்ந்த திரு. வி. எல். பி. மெண்டிஸ் அவர்களின் நிர்வாகத்தில் இலங்கைக் காட்சி "மண்டபம்" இருக்கிறது. தந்தவிக்கிரகங்கள், பதுமைகள், கருங்காலி மரயானைகள், வெள்ளிச்சாமான்கள், நவரத்தினங்கள்இழைத்த அணிகலன்கள்முதலியன இங்கு வைக்கப்பட்டிருக்கின்றன. உலக வர்த்தகவாரம் அமெரிக்கநாடெங்கும் கொண்டாடப்பெறுகிறது. சர்வதேச வர்த்தகப் பெருக்கத்தை நோக்காகக் கொண்டுள்ள இதேபோன்ற பொருட்காட்சிகள் மற்றும் 150 இடங்களில் திறக்கப்பட்டிருக்கின்றன.

## இன்றைய உலகம்

— வாஷிங்ரன்

ஒருவனுடைய குடும்பம் பசியால் தவிக்கிறதுஎன்று ஓயாமல்ஒழியாமல் பிரசாரம்செய்வதே அவனுடையமனதில் கசப்பை உண்டுபண்ணுகிறது. அதற்கு இந்தஉணவுப் பிரச்சினையைக் காட்டிலும் வசதியான பிரசாரஆயுதம் இல்லைஎன்பதைக் கம்யூனிஸ்தர்கள் அறிகிறார்கள். ஆனால், இந்தியர்கள் யதார்த்தவாதிகள். கடப்பைக் கவனிக்கிறவர்கள். ஆசியற்சுலோகங்கள் அரைச்சாப்பாட்டுக்கும் உதவாஎன்பது அவர்களுக்கு நன்றாகத்தெரியும். வாக்குறுதிகள் உடலுக்கு வலுவூட்டா என்பதும் இந்தியர்களுக்குத்தெரியும்.

சிலவாரங்களுக்குமுன் ருஷியாவும், சீனாவும் 1951-இல் அரிசிகொடுப்பதாகச்சொன்ன ஆசைவார்த்தைகளை இந்தியர்கள் நினைத்துப்பார்த்தார்கள். என்னவோ ஏதோ ருஷியாவும், சீனாயும் சொன்னசொல்லை நிறைவேற்றத் தவறிவிட்டன. இது (ருஷியாவும், சீனாவும் அரிசிதரவாக்களித்தது) பிரசாரவித்தையென்றும், அதை நிறைவேற்றும்எண்ணம் கொஞ்சங்கூட இல்லாமலேயே அள்ளிவீசப்பட்ட வார்த்தைகள்என்றும், செல்வாக்குள்ள இந்தியர்சிலர் சொல்லவும் எக்கச்சக்கமான ஒருநிலைமைஏற்பட்டது.

மேற்சொன்ன அபிப்பிராயத்தின் உடனடியானபலனாக, ஆசியாவிலுள்ள ஒவ்வொரு கம்யூனிஸ்த ஸ்தானீகராலயத்திலும் பிரமாதமான பரபரப்புக் கிளம்பிற்று. இரண்டாவதாக, இந்தியாவுக்கு ஒருலட்சம்தொன் அரிசி கப்பலேற்றுவதாகக் கம்யூனிஸ்தசீனாவிலிருந்து வார்த்தைவந்தது. இவ்வருடத்திலே ஏற்றுமதிசெய்வதற்குத் தன்னிடம் அரிசியேஇல்லைஎன்று கொஞ்சக்காலத்துக்குமுன் இந்தியஅரசாங்கத்துக்குச் செஞ்சீனா அறிவித்ததை இந்தியர்கள் உடனே ஞாபகப்படுத்திக்கொண்டார்கள். இப்போது இந்தியர்கள் என்னநினைக்கின்றனர்என்றால், இந்தத்தடவையும் செஞ்சீனா பழைய பிரசாரபல்லவிதான் பாடுகிறதா? அல்லது இந்தத்தடவையாவது வார்த்தையைக் காப்பாற்றிக்கொள்வதற்காகப் பட்டினிகிடக்கும் தனதுசனங்களின் வாயை அடைத்துவிட்டு அரிசிஅனுப்புமா? என்பதே.

## தற்காப்பு ஏற்பாடுகள்

— வாஷிங்ரன்

"உலகம் சமாதானம்பெறவும், மூன்றாவது உலக மகாயுத்தத்தைத் தடுக்கவும்" நடக்கின்ற முயற்சியிலே "நாம் வெற்றியின்வாயிலில் நிற்கிறோம்" என்று ஜனாதிபதிட்ரூமன் கருதுகிறார். இங்கு வருடாந்த இராணுவதின விருந்துபசாரத்திலே பேசுங்கால், அவர் பின்வருமாறுகூறினார்: "இன்று நம்முடையஇராணுவபலம் சென்ற வருடத்திலும் மிகுந்திருக்கிறது. நமது தற்காப்புச்சாதன உற்பத்தி பெருகிக்கொண்டிருக்கிறது. ஐரோப்பாவிலும், ஆசியாவிலும்உள்ள கூட்டாளி நாடுகளுடன் இணைவான தற்காப்பு ஏற்பாடுகளை உறுதிப்படுத்திக்கொள்வதில் அமெரிக்கா குறிப்பிடத்தக்க முன்னேற்றம்கண்டிருக்கிறது. இடையிலே ஏற்றத்தாழ்வுகள் குறுக்கிட்டபோதிலும் இன்றுநாம் வெகுதூரம் முன்னேறிவந்திருக்கிறோம். எனவே, ஆக்கிரமிப்பாளனின்பாதையில் முன்னிலும் இப்போது கூடுதலானமுட்டுக்கட்டைகள் மலிந்திருக்கின்றன. அவ்வளவுக்கவ்வளவு மறுயுத்தம்தோன்றுவதன் சந்தர்ப்ப[illegible] என்றே அர்த்தமாகிறது. தண்ணீர்க்குழாயைத் திறந்துமூடுவதுபோலத் தற்காப்பு நிர்மாணத்துறையில் நடந்துகொள்ளக்கூடாது. வருகிற நிதிவருடத்திற்குத் தாம்கோரிய தற்காப்பு மான்னியத்தை அங்கீகரிக்கும்படிக்குக் காங்கிரசைவற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்.



அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்

சென் வின்சென்ற் டி போல் தருமசபை யாழ்ப்பாணம்

### நன்றியறிந்த ஸ்தோத்திரங்களும் மன்றாட்டங்களும்

கல்கமுவா:— சகலவித இடைஞ்சல்களிலும் அடியாரின் தஞ்சமான ஆராதிஷ்ட அந்தோனியாரே, தேவசித்தத்துக்குப் பணிந்தபனதுடன் உம்மை இரந்துமன்றாடி எனது பிள்ளைகளின் வியாதிவருத்தங்களைத் தீர்த்தருளச் சர்வ வல்லபரான சர்வேசுரனிடம் கேட்டுத் தந்தருளும்படி கெஞ்சிக் கேட்டேன். எனதுமன்றாட்டு அனுகூலமானபடியால் நன்றியாக உமதுஏழைகளின் தருமஅப்பத்துக்குக் காணிக்கையாக ரூபா 3 அனுப்பியிருக்கிறேன்.

வி. அந்தோனிப்பிள்ளை

சூராவத்தை:— யேசுவின் இரக்கத்தாலும், பாத்திமாமாதா, திருக்குடும்பத் தலைவரான அர்ச். சூசையப்பர், கோடி அற்புதரான அர்ச். அந்தோனியார் இவர்களின் வேண்டுதலினாலும் நான்கேட்ட காரியம் அடையப்பெற்றேன். இவர்களின்நாமங்கள் எங்கும் என்றென்றைக்கும் புகழப்படுவதாக. நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கும்படி கேட்கிறேன். அர்ச். அந்தோனியாரின் ஏழைகளின்அப்பத்துக்குக் காணிக்கையாக ரூபா 5 அனுப்பியிருக்கிறேன்.

யோ. கி.

சூராவத்தை:— திருஇருதய ஆண்டவரின் இரக்கத்தாலும், பரிசுத்த பாத்திமா மாதாவின் வேண்டுதலாலும், கோடியற்புதராகிய அர்ச். அந்தோனியார், தவறாது அனுகூலந்தரும் அர்ச். சவேரியார் இவர்களது மன்றாட்டினாலும், நான் சோதனையிற் சித்தியடைந்தேன். நேர்த்திப்படி அர்ச். அந்தோனியாரின் தரும அப்பத்துக்குக் காணிக்கையாக ரூபா 3 அனுப்பி இதைப் பிரசுரிக்கும்படி தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

G. J.

போளவத்தை:— கோடியற்புதராகிய அர்ச். அந்தோனியாரிடம் நான் பெற்றுக்கொண்டுவரும் கணக்கற்ற உதவிகளுக்காக அவரது ஏழைகளின் அப்பத்துக்குக் காணிக்கையாக ரூபா 1 அனுப்பியிருக்கிறேன்.

J. மரியமதலேனா

மன்னார்:— தேவனின் இரக்கத்தாலும், அர்ச். தேவமாதா, அர்ச். சூசையப்பர், கோடியற்புதராகிய அர்ச். அந்தோனியார் இவர்களின் வேண்டுதலினாலும் யான் கேட்ட நன்மைகள் கிடைக்கப்பெற்றேன். அர்ச். அந்தோனியாரின் ஏழைகளுக்கு நேர்த்திப்படி ரூபா 2 அனுப்பி இதைப்பிரசுரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

சி. ந.

முள்ளிக்குளம்:— நான் கேட்ட நன்மைகளை மனமுவந்து அர்ச். அந்தோனியார் தமதுவேண்டுதலால் பெற்றுத்தந்தபடியால் நன்றியறிதலாக அவரின்ஏழைகளுக்குக் காணிக்கையாக ரூபா 2-50 அனுப்பியிருக்கிறேன்.

அ. அன்னம்மாள் வாஸ்

### கேட்டநன்மைகள் அனுகூலமானதினால் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

சூராவத்தை: எஸ். ஆசீர்வாதம் 2-00 —சிங்கப்பூர்: எம். ஏ. பெஞ்சமின் 10-00 — மாறுவில்: பிறுங் அன்ரன் 34-00 — போளவத்தை: ஏ. இரட்ணம் 1-00 — கல்கமுவா: எஸ். அந்தோனியாள் 1-00 — சீனுவோகி: தோமஸ் மோசேஸ் 2-00 — வதுளை: பிலிப் அந்தோனி 2-00 — யாழ்ப்பாணம்: எஸ். யோண்பிள்ளை 5-00 — கேகாலை: ஏ. சுவக்கின் 5-00 — பண்டாரவளை: சூசைமரி பீற்றர் 1-50, மரிய ரோஸ் பீற்றர் 2-00, தோமஸ் சூசை 2-00 — முள்ளிக்குளம்: எம். சந்தியா சில்வா 2-00 — உடப்புசலாவை: எஸ். எம். யோசேப்பு 15-00—கொழும்பு: சே. அல்வீனு பெறேரு 2-00—ருசக்கதமுவை: டபிள்யு. எஸ். அகஸ்ரீன் பெர்னாண்டோ 1-00 — உடப்புசலாவை: எம். அந்தோனிப்பிள்ளை 5-00 — கல்கமுவா: வி. சந்தியா 1-00, எஸ். கிறகோரி 2-00, ஏ. பஸ்ரியன் -50, எஸ். செபஸ்தியாம்பிள்ளை 1-00 — நீர்கொழும்பு: கே. எஸ். மேரி தொஸ்லீன் 1-00--காக்காப்பள்ளி: ஆர். எஸ். ஆர். காசிஐயா 5-00 — தலவாக்கொலை: ஜி. டானியல் 3-00 — இற்றாலை: பிறுங் எல். லீயோ 5-00 — வதுளை: பி. எவ். சூசைப்பிள்ளை 1-00 — கல்இல்லா: ஏ. எல். பி. சைமன் 2-00—அம்பிற்றியா: வின்சென்ற் சைமன் 2-00 — இல்லா: எஸ். வி. பீற்றர் 5-00—கொள்ளுப்பிட்டி: ஏ. சந்தியாப்பிள்ளை 5-00—மஸ்கேலியா: பி. கபிரிகேல் 1-50—கண்டி: எல். ரி. எஸ். பஸ்ரியன் 1-00 — மலாயா: ஜே. சவிரிமுத்து 10-00 — யாழ்ப்பாணம்: வி. ரேமான் 2-50—பரந்தன்: கே. அந்திரேயாஸ் -50—கன்னுட்டி: எஸ். எம். பெமியான் 1-00 — இற்றாலை: மிசெஸ் பிறுங் அன்ரன் 2-00—அக்கரபற்றன: எல். ஏ. எஸ். தோமஸ் 2-00 — கல்கமுவா: ஆர். சுவக்கின் 1-00.

| | |
|---|---|
| The Director, St. Joseph's Conference. Bishop's House JAFFNA. | சென் வின்சென்ற் டி போல்சபைத்தலைவர் மேற்றிராசன மாளிகை யாழ்ப்பாணம். |

## பாத்திமாவில் நோயாளர்தினம்

இத்தினம் பண்டத்தெருப்பிலுள்ள பாத்திமாகிரியில் கடந்த சனிவாரம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. அன்று காலைநிறைவேறிய இருபூசைகளிலும் ஏராளமானோர் சமுகமளித்திருந்தனர். இரண்டாவதுபூசை மகாவந். கியோமார் ஆண்டவரால் நிறைவேறியது. பகல்முழுவதும் வியாதிக்காரர் மாதாவின்பக்கலில் பிரார்த்தித்த வண்ணமிருந்தனர்.

மாலை 4 மணியளவில் அவர்களும், யாழ்ப்பாணக் குடாநாட்டின் நாலுபக்கங்களிலுமிருந்து வந்துகூடிய ஆயிரக்கணக்கான விசுவாசிகளும் கோவில் முன்றிலில் சூழ்ந்துநிற்கச் செபமாலை யோதப்பட்டது. அதனைத்தொடர்ந்து வண. மதுரநாயகம் சுவாமியவர்களால் "கடவுளின்சித்தமே நமதுபாக்கியம்" என்பதைப் பீடிகையாகக்கொண்டு ஓர் இனியபிரசங்கம் செய்யப்பட்டது.

பின்னர் மகாவந். எமிலியானுஸ் ஆண்டவரவர்கள் சற்பிரசாதநாதனைத் தாங்கிய கதிர்ப்பாத்திரத்தைக் காத்தேந்தி வியாதிக்காரர் இருக்குமிடம் சென்று அவர்களை ஆசீர்வதித்தார். திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்துடன் இவ்வைபவம்முடிவெய்திற்று. சுபம்!

—நிருபர்

## அறிவித்தல்

எங்கள் செல்வப்புத்திரியின் திருமண வைபவத்திற்குச் சமுகந்தந்தும், வாழ்த்துச்செய்திகள், வெகுமதிகள் அனுப்பியும் மகிழ்வித்த உறவினர், நண்பர்கள் யாவர்க்கும் எங்கள்மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்

அ. துரைசாமியும் பாரியாரும்.

புங்குடுதீவு கிழக்கு

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 12-1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org